www.tamilarangam.net

# ஈழம்




**நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நமது எண்ணம்

நாம் ஈழவர்
நமது மொழி தமிழ்
நமது நாடு ஈழம்

## நமது இலட்சியம்

மன்னார் முதல் மட்டக்களப்பு வரை
பருத்தித்துறை முதல் பதுளை வரை
பொத்துவில் உள்ளடங்கிய-பிரதேசத்தில் வாழும்
தமிழ்பேசும் மக்களுக்கு சமத்துவ சமதர்ம
ஆட்சியை நிலை நிறுத்துவோம்

## நமது கொள்கை

மதத்தால் இந்துவானாலும்
மாண்பில் முசுலீம் என்றாலும்.
வேதம் பயிலும் கிறிஸ்துவனும்
தீரச் சைவன் ஆனாலும்
ஈழத் தமிழர் ஈழவரே—அவர்
எங்கிருந்தாலும் நம்மவரே

## நமது கோட்பாடு

எந்த வனத்தில் வாழ்ந்தாலும்
ஈழத் தமிழர் ஈழவரே!
சொந்தம் உறுதியடா—இது
சோசலிசத்தின் கருதியடா!

www.tamilarangam.net

ஈழம்

மலர் 1 — இதழ் 2 — 15 - 10 - 83 — அன்பளிப்பு ரூபா 2

•

அட்டை ஓவியம்

இளவேனில்

நேரு.

•

தொடர்புக்கு :
மே. பா. பாலன்
வே. க. ராசா
10, சிவன்கோயில் தெரு,
சென்னை-24.

•

# எதிரொலி

நாம் என்ன செய்ய வேண்டும்? எங்கிருந்து தொடங்குவது? இன்று ஈழப் போராளிகள் விடை காண வேண்டிய அவசியமான கேள்விகள். இவற்றிற்கான விடைகள் தெளிவாக்கப்படாத வரைக்கும் வரையறை செய்யப்படாத வரைக்கும் நடந்து முடிந்த தொடர்ச்சியான ஈழத்தின் துயரம் மீண்டும் மீண்டும் தொடரும்.

இத்தனை காலமும் ஈழம் சந்தித்த அடக்குமுறையையும் இனப்படுகொலையினையும் தொடர்ந்து அனுமதித்தல் என்பது எம்மைமுகமற்ற மனிதர்களாகவே உலகுக்கு அறிமுகம் செய்து வைக்கும், இவைகளை தடுத்து நிறுத்தும், நம்மை தற்காத்துக் கொள்ளும் எதிரியை முறியடிக்கும் போராட்டம் ஒன்று வடிவமைக்கப்படாமல் ஆரவாரம் செய்வதும், அலட்டிக் கொள்வதும், வீராப்பு பேசுவதும் ஒரு தேசிய இனத்தின் மரணத்திற்கே வழிவகுக்கும்.

ஈழத்திற்கான பயணம் என்பது நால்வர் இணைந்த நட்பினில் மட்டும் கிட்டிவிடாது என்பதற்கு அண்மைய நிகழ்வுகள் சாட்சியங்களாகின்றன. இத்தனை ஆயிரம் படுகொலைகள் நிகழ்ந்தபோதும் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டபோதும்கூட நின்று நிதானித்து திரும்பி எதிர்த்தாக்குதல் எதுவும் இதுவரை நிகழாததற்கான அடிப்படைக் காரணத்தை கண்டறியாமல் வாய்ச்சவடால் அடிப்பது, தனி மனித மன அரிப்பை தீர்த்துக்கொள்ள மட்டுமே உதவும்.

போராட்டம் என்ற பெயரில் ஈழத்தின் போராளிகள் என்று அழைக்கப்படுபவர்களால் இதுவரை அரங்கேற்றிய நாடகங்கள் அனைத்தும், அவலக்காட்சியினையே உச்சக் கட்டக் காட்சியாய் எமக்கு காட்டியுள்ளன? இவைகள் அனைத்தும் "தவறு" என்பதினை மீண்டும் 1983ன் நிகழ்வுகள் எமக்கு எச்சரிக்கை செய்கின்றன. இவ்வெச்சரிக்கையினை தொடர்ந்து ஈழப்போராளிகள் புறக்கணிப் பார்களேயானால் நிழல் யுத்தம் புரிபவர்களாய் நமக்குள்ளே நாம் அழிந்துபட நேரிடும்-போராட்ட பின்னடைவுக்கு வழி சமைக்கும்.

1983ன் கோர நிகழ்வுகள் சில படிப்பினைகளுடன் போராளிகளை இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளிவிட்டுள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளது. முனைப்பான போராட்டம் மேற்கொள்ளப்படாமலேயே நசுக்கப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். இன்றைய ஈழத்தின் எதிர்காலம் எவர்கையில் உள்ளது என்பது கேள்விக் குறியாகி உள்ளது. தவழும் பருவத்திலேயே சர்வதேச தீர்வு ஒன்றை நோக்கி கையேந்த வேண்டியவர்களாய் உள்ளோம். ஜனநாயகத் தலைமையோ, போராட்ட முன்னெடுப்புக்கு வழிதேடாமல், அணியமைக்காமல், சர்வதேச நகரங்களை நோக்கி பறந்து கொண்டிருக்கின்றார்கள், ஸ்ரீலங்கா சோசலிச அரசோ, ஏகாதிபத்திய நாடுகளுடனும், அதன் அடிவருடிகளுடனும், கைக்குலுக்கி, தம்பலத்தை, இறுக்கமாக்கி கொண்டிருக்கின்றார்கள். கறுப்புச்சட்டங்கள், அவசர அவசரமாக ஏற்பிக்கப்படுகின்றன. ஈழ மக்களோ, வெளியேறிய வண்ணமோ, வெளியேற்றப்பட்ட வண்ணமோ உள்ளனர். இன்னொரு பாலஸ்தீனமாய் ஈழம் சத்தம் போடமல் மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம், பலப்பரீட்சை நடத்தி பார்க்கலாம்? என்று மூக்கை நுழைத்துக்கொண்டிருக்கிறது. இடையூடேதான் நம் போராட்ட முன்னேர்ப்புக்கு நாம் திட்டமிட்டடாக வேண்டும்.

இவைகளே இன்றைய ஈழத்தின் நிலைமைகள் இவற்றின் மத்தியில் இன்னுமொரு முக்கிய விடயத்தையும் கவனத்தில் கொண்டேயாகவேண்டும். ஈழப்போராட்டத்தில் முன்னெடுக்க துடிக்கும் இயக்கங்கள், அமைப்புகள், குழுக்கள் மத்தியில் எந்தவித இணக்கமும் ஏற்படாத நிலையே காணப்படுகின்றது. இணக்கங்காணும் முயற்சிகளிலும் 10 சதவீதம் கூட முன்னேற்றம் காணப்படவில்லை. வாய்கள் பேசுவதையும்விட துப்பாக்கிகளிலேயே நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். இவைகள் தொடர்வது என்பது நமது இலக்கையே சிதறடித்துவிடும்.

ஆதலால் ஒவ்வொருவரும் ஈழத்தின் எதிர்காலம் குறித்து தீர்க்க தரிசனத்துடன் கூடியதான அரசியல், இராணுவ நடவடிக்கைகள் இணைந்ததான முடிவுக்கு வந்தேயாக வேண்டும். அத்துடன் எதிரியின் பலமும், உலக அரங்கின் நிலையும் கவனத்தில் கொள்ளப்பட்டு போராட்ட உத்திகளில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். இயக்கங்களின் நடவடிக்கை மக்களின் எண்ணப்பாங்கிற்கு இடையேயான இடைவெளி நீக்கப்படும் நடவடிக்கைகளில் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும். போராடுவது மட்டுமே எமது வேலை எனும் நிலை மாறி எதிர்கால வாழ்விற்கும் வளர்ச்சிற்கும் தெளிவான திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதுடன் போராட்டம் முடிந்து விடாது. அதன் பின்பே மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்து செல்ல வேண்டி வரும் என்ற உறுதிப்பாடும், தெளிவும் கொள்ள எமது செயல்பாட்டை தொடர்ந்தாக வேண்டும் ஈழம் இவைகளையே முன்னிறுத்தும். தன் அறை கூவலை, செயல்முறையை எதிரொலிக்கும்.

---

# தாக்குவதற்கு முற்படலாமா?

கோட்பாடு ரீதியில் நாம் பயங்கரவாதத்தை ஒரு பொழுதும் நிராகரித்ததில்லை; நிராகரிக்கவும் முடியாது, பயங்கரவாதம் என்பது ராணுவ நடவடிக்கையின் ஒருவகையாகும். அது படைகளின் குறிப்பிட்ட நிலையையும், குறிப்பிட்ட சூழ்நிலைகளையும் பொறுத்து, குறிப்பிட்ட தருணத்தில் முற்றிலும் பொருத்தமாக விருப்பதுமட்டுமன்றி இன்றியமையாததாகவும் கூட இருக்கலாம். ஆனால் இவர்களது கூற்றின் சாரம் என்ன? போராட்டத்தின் முழு ஏற்பாட்டுடன் நெருக்கமாக பின்னிப் பிணைந்த வகையில், களம் புகுந்து போர்புரியும் இராணுவத்தின் ஒரு நடவடிக்கையாக இவர்கள் இப்போது பயங்கரவாதத்தை கருதாமல், எந்த இராணுவத்துடனும் தொடர்பற்ற விதத்தில் தனிப்பட்டோரை தாக்கும் தனிப்பட்ட முறையாகவே அதனைக் கருதிப் பேசுகின்றார்கள். மத்திய ஸ்தாபனம் இல்லாத நிலையில் ஸ்தலப் புரட்சி ஸ்தாபனங்கள் பலவீனமாக இருக்கும் நிலையில், பயங்கரவாதம் இந்த வகையில்தான் உருவாகும். எனவேதான், தற்போதைய சூழ்நிலையின், இத்தகைய போராட்ட முறை. காலத்திற்கு ஒவ்வாததாயும் பொருத்தமற்றதாயும் உள்ளதென்று நாம் உறுதியாகச் சாதிக்கின்றோம். மேலும் இப்போராட்ட முறை தீவிரமாகப் போராடும் வீரர்களின் கவனத்தை, முழு இயக்கத்தின் நலன்களைக் கருதுங்கால் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த உண்மைக் கடமையிலிருந்து அப்பால் திருப்புகிறது என்றும். அது அரசாங்கச் சக்திகளை அல்ல. புரட்சிச் சக்திகளையே சீர்குலைக்கிறது என்றும் நாம் உறுதியாய்ப் பிரகடனம் செய்து வருகின்றோம். சமீபகால நிகழ்ச்சிகளை நினைவூட்டி கொள்ளுங்கள். நம் கண்ணெதிரே, பெருந்திரளான நகரத் தொழிலாளரும் 'சமானியக் குடிகளும்' போராட்டத்தில் குதிக்கத் துடிதுடிக்கின்றார்கள். ஆனால் புரட்சிக்காரர்களுக்குத் தலைவர்களையும் அமைப்பாளர்களையும் கொண்ட செயற்குழு எதுவும் இல்லை. இத்தகைய சூழ்நிலைகளில் ஆற்றல் மிக்க புட்சிக்காரர் பயங்கரவாதத்தை தழுவுவதால், எந்த போர் படைகள் மீது நம்பிக்கை வைக்கலாமோ அந்த போர் படைகள் பலகீனம் அடையும் என்ற ஆபத்து ஏற்படாதா?

"எங்கிருந்து தொடங்குவது"

—புரட்சிப்புரவலன் லேனின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் எங்கள் தாயகம்

அரசும் இறைமையும் ஒரு நாட்டினத்தின் வரலாறு மறைக்கப்படுவதும், திரிக்கப்படுவதும், கொச்சைப் படுத்தப்படுவதும் தவிர்க்க முடியாதது. அதே போல் அரசையும் இறைமையையும் கையில் வைத்திருக்கும் ஒரு நாட்டினம் தனது பழைமைக்கு அர்த்தம் கற்பிப்பதும் ஆய்வு செய்வதும் பீற்றிக் கொள்வதும் நடைபெறக் கூடியது.

ஈழத்தின் மீதான அடக்குமுறையும், அதனுல் ஏற்பட்ட அவலங்களும் கடல் கடந்த நாடுகளை ஈர்க்கத் தொடங்கியதில் இருந்து அம்மக்களின் பழைமை குறித்தும் வரலாறு குறித்தும் பல தரப்பட்ட விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. விமர்சனங்கள் செய்யப்படுகின்றன. 1983 யூனில் ஏற்பட்ட மறக்க முடியாத இரத்தக்களரியின் போது உலக அரங்கு தன் கவனத்தை ஈழத்தின் பால் திருப்பியது. பிரித்தானிய வானொலியும் தொலைக்காட்சி நிலையமும் இலங்கையின் பூர்வ குடிமக்களுக்கும் குடியேறிய தமிழர்களுக்கும் இடையில் கலவரம் மூண்டுள்ளது என்று செய்தியை ஒலிபரப்பியது. இந்தியாவிலோ இங்கிருந்து பிழைக்கப் போனவர்களுக்கு தனிநாடு கேட்கும் எண்ணம் ஏன் வந்தது. அவர்களுடன் சேர்ந்து வாழ்வதுதானே என்றும், தமிழத்திலோ சேயகத் தமிழர்கள் அடிபடுகின்ருர்கள் தாயகத் தமிழர்கள் நாம் என்ன செய்வது நாங்களே படையெடுத்து செல்வோம் என்று அறைகூவல் விடுப்பதும் இராணுவத்தை அனுப்பி இலங்கையை இந்தியாவின் மாநிலமாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுவதும் அதற்கு மேலாக ஈழத்தில் இருந்து வெளியே ஓடிவந்து கூக்குரல் இடுவோர்கள் ''தாய்த் தமிழகமே, எங்களைக் காப்பாற்ற ஓடிவரமாட்டாயா? உதவி செய்ய மாட்டாயா?'' அன்று சென்னை நகரத்தில் அபயக் குரல் எழுப்புவதும், ஈழத்தின் வரலாற்றின் மீது சந்தேகத்தையும் மயக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. இவர் கூறுவதின்படி இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமிழகத்தில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் தானு? தமிழர்களின் பிறப்பிடம் தமிழகம் தானு? இலங்கையின் பூர்வீக குடிகள் யார்? என்ற அடிப்படையான கேள்விகளை நாம் எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம்!

இலங்கைத்தீவு பௌத்தம் சைவம், இஸ்லாம், கிருஸ்தவம் ஆகிய நான்கு மதங்களை பின்பற்றும், தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழி பேசும் மக்களை உள்ளக்கியதாய் அமைந்துள்ளது. இதில் தமிழ்மொழி பேசும் மக்களின் வரலாறு குறித்துதான் நாம் இங்கே சில விளக்கங்கள் தரவேண்டியவர்களாக உள்ளோம். சிங்கள மொழி பேசும் மக்களை குறித்து மகா வம்சம் இதிகாசம் அவர்களது வரலாற்றிற்கு அடிப்படையாகின்றது. அதிலிருந்தே அவர்கள் தம் வரலாற்றை தெளிவு படுத்துகிருர்கள். நிர்ணயிக்கிருர்கள். இலங்கை தீவின் அரசு என்பது இவர்கள், நலன்களையே பிரதிபலிப்பதனுல் சிங்கள வரலாற்ருசிரியர்கள் அதை ஒட்டியே ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை வெளியிட்டனர் ஆனுல் தமிழ் பேசும் மக்களை பொருத்தவரை அவர்கள் வரலாறு குறித்தான இதிகாசங்களோ இலக்கியங்களோ இல்லை. ஆங்காங்கே சில இலக்கியங்களில் செய்திகளாக மட்டும் சிதறிக்கிடக்கின்றன. ஆனுல் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய ஆகழ் ஆராய்வுகள் ஈழத்தின் தொண்மையை வரலாற்றை நிரூபிக்கும் சான்றுகளாக அமைந்துள்ளன.

முதலில் தற்போதய ஈழத்தின் மக்களைப் பற்றிய சிறு விளக்கத்தை தெரிந்துகொண்டாக வேண்டும் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியிலும் மத்திய பகுதியான மலையகத்திலும் தமிழ் பேசும் மக்கள் செறிந்தும் அதிகமாகவும் வாழ்ந்து வருகிருர்கள். இதில் வடக்கு கிழக்கு பகுதியில் வாழ்பவர்கள் வரலாறு நிர்ணயிக்க முடியாத காலம் தொட்டு வாழ்கின்ருர்கள் அதாவது சிங்கள மொழி பேசுவோரின் வரலாற்றுக் காலத்தை ஒட்டி அல்லது அதற்கு மேலாக அவர்கள் அங்கு வாழ்கின்றனர். இவ்வரலபறு குறித்தானதே இங்கே ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. அடுத்து மலையக பகுதியில் வாழ்பவர்கள் இவர்கள் 1820 கால கட்டத்தில் ஆங்கிலேயரால் பெரும் தோட்டங்களை உரு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாக்குவதற்கும் அதில் உழைப்பதற்குமாக இந்தியாவில் குறிப்பாக தமிழகத்திலிருந்து கூலிகளாய் கொண்வரப்பட்டு குடியேற்றப் பட்டவர்கள். இப்படி இரண்டு வித வரலாற்றுச் சட்டங்களைக் கொண்ட தமிழ் மொழி பேசும் மக்கள் அங்கே வாழ்கின்றனர் இதன் விளைவாகத்தான் இவர்களின் வரலாறு குறித்து மயக்கமும் திரிவும் கடல் கடந்த நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றது இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்ன வென்றால் இலங்கைத்தீவைப்பற்றி ஈழத்தைப் பற்றி பேசும் குரல் எழுப்பும் விமர்சிக்கும் இவர்கள் அதன் வரலாற்றை அடிப்படையை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இதில் வேடிக்கையானது என்னவென்றால் தமிழ் பேசும் மக்களின் தோற்றம் தொன்மை பற்றியும், பொற்காலம் மூச்சுகுடி என்றும் கிலாகித்துப் பேசும் தமிழினக் காப்பாளர்கள் தமிழ் மொழித்தூய்மையாளர்கள் கூட தவறுய் பேசுவது தான்.

கடல் மூடாத நிலத்தொகுதியொன்று பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்து சமுத் திரப்பகுதியில் இருந்ததென்பதும் அது லெமூரியா அல்லது குமரிக்கண்டம் என்று அழைக்கப்பட்டது என்பதும் பல உலக வரலாற்று ஆய்வாளர்களால் ஒப்பதுக்கொள் ளப்பட்டுள்ளது. அங்கு ஒரு நாகரிகம் வாழ்ந்த மக்கள் வாழ்ந்தனர் என்பதும் தமிழ்பேசும் மக்களின் மூல இடம் இதுவாகத் தான் இருக்கலாம் என்பதும் உலகின் முதல் மனித பரிணமம் இங்குதான் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதும் பல ஆய்வாளர்களின் கருத்தாகும். தமிழகத்திலுள்ள தமிழினக் காப்பாளர்களினதும், தமிழ்த் தூய்மையாள் களினதும், அடிப்படையாக ஆதார சுருதி யாக மேற்கூறியவையே அமைந்துள்ளன.

இப்போ நாம் சில கேள்விகளை எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம் கடலில் மூழ்கிய குமரிக்கண்டத்தில் எஞ்சிய பகுதி கள் எதுவும் இல்லையா? இருந்தால் அது எது? இன்றைய இந்தியா அல்லது தமிழகம் குமரிக் கண்டத்துடன் இணைந்திருந்ததா? இலங்கைத் தீவு எந்த நிலப்பரப்பின் எச்சம்? கடல் மூழ்கிய பகுதின் எச்சமா? குடிம்பரமல் எங்கே இருந்து நடைபெற்றது? அல்லது இந்திய நிலப்பரப்பிலிருந்து துண்டாடப் பட்டதா? இவற்றிக்காண விடைகள் கருதள வில் தானும் வெளியிடப்பட்டு ஒபபுக்கொள் ளப்பட்டால் தான் தாயகம் எது சேயகம் எதுஎன்னும் முடிவுக்கு வரமுடியும் சோவியத் இந்திய இயலாளரான ஜி. ஜெகிராப் இந்திய, பாகிஸ்தான், இலங்கை நேப்பாள மொழிகளை ஆராய்கையில், திராவிட மக்கள் (தமிழர்களின் மூதாதையர்) வடக்கில் தெற்காக அல்ல, தெற்கில் இருந்து வடக் காக குடிம்பரம்பினுர்கள் என்ற கருத்தே வலுப் பெறுகின்றது என்கிருர். ஆகை யால் தாயகம் நாங்கள் சேயகம் நீங்கள் என்று கண்ணை மூடிக்கொண்டு பேசுவது வரலாற்றை கொச்சைப் படுத்துவதாகவே அமையும்.

''ஈழத்து உணவு'' பற்றி பட்டிணப்பாலை பதிவுசெய்துள்ளதே பட்டிணப்பாலை எத்தனை யாம் நூற்ருண்டு இலக்கியம்? ''ஈழத்து பூதந்தேவன்'' பற்றி சங்க இலக்கியம் கூறு கின்றதே சங்க காலம் எந்த நூற்ருண்டை ஒட்டயது? இக்காலங்கள் கிறிதுவுக்கு முன்பா பின்பா எப்படி என்ருலும் இரண்டாயிரம் ஆண்டுகள் முன்பு எனக்கூறும் இலக்கியம் முகிழ்ந்த கால கட்டத்தில் உணவு உற்பத்தி யும் ஏற்றுமதி வர்த்தகமும் இலக்கிய வெளிப் பாடும் கொண்ட மக்கள் ஈழத்தில் வாழ்ந் தார்கள் என்பது புலனுகின்றதல்லவா அப் போ இவர்களின் வரலாற்று கால சட்டம் இரண்டாயிரம் ஆண்டுகளையும் அல்லவா கடந்து செல்கின்றது அப்படியிருக்கும் போது இவர்கள் தமிழகத்திலிருந்து தான் சென்று குடியேறினுர்கள் என்பதற்கான வரலாற்று சான்றுகள் என்னதான் உண்டு. அப்படித் தான் இருந்தாலும் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் தமிழகம் விட்டு சென்றவர் களின் இன்றைய தலைமுறையினருக்கு தமிழகம் எப்படித் தாயகமாகும்.

யாழ்பாண பல்கலைக் கழகம் அமைக்கப் பட்டபின் அதன் வரலாற்றுப்பிடம் மேற் கொண்ட அகழ் ஆராய்வுகளின் போது ஈழத் தின் வரலாறு மிகவும் பின் நோக்கி இழுத்துச் செல்லப்படுவதற்கான தடயங்களை சின்னங் களை பெறக்கூடியதாய் இருந்தது. குறிப்பாக ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ் ஆராய்வின்போது பெறப்பட்ட பொருட்கள் தடயங்கள், சின்னங்கள், ''பெருமகற் பண்பாடு'' காலகட்டத்தை சேர்ந்தவை என இறுதி ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. கந்தரோடை, பொம் பரிப்பு (பொன் அரிப்பு) போன்ற இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் போது கிடைத்த தடயங்களும் ஆனைக்கோட்டை ஆய்வு முடி வுக்கு வலிவு சேர்கின்றன. ''பெரும்கற் பண் பாடு'' காலகட்டம் என்பது சிந்துவெளி நாகரீகத்துக்கு முற்பட்டது என்பது ஆய் வாளரின் கருத்து, அதாவது மனிதன் நாகரீ வளர்ச்சியை நோக்கி முன்னேறிக் கொண் டிருந்த காலகட்டத்திற்கும் மன்னர் ஆட்சி தொடங்காத காலகட்டத்திற்கும் இடைப் பட்ட காலத்தின் நாகரீகத்தின் சின்னங்களே ஆனைக்கோட்டையில் கிடைக்கப்பெற்றன.

13-ம் பக்கம் பார்க்க



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கரையை நோக்கி ஒரு கப்பல்

## (லங்கா ராணி நாவல்-ஒரு அறிமுகம்)

—பேராசிரியர் பெரியார்தாசன்

அண்மையில்தான் அந்த தேசம் இரத்தத்தில் நனைந்து போயிற்று. மனிதர்களில் ஒரு பகுதியினர் கழுகுகளாக மாறிப் போயினர். கொலை கொள்ளை தீவைப்பு ஆகியவற்றின் உச்ச கட்ட அரங்கேற்றம் நடந்து முடிந்தது. 1958-ல் தொடங்கி இந்த 1983 வரை இலங்கையில் அடிக்கடிதமிழர்கள்மீது வெறித் தனமாய் நடத்தப்பட்ட இனப் படுகொலைகளுக்கெல்லாம் இந் தக் கலவரம் சிகரம் வைத்தாற் போலிருந்தது. பிணந்தின்னி அரசியல்தான் பேரினவாதம் என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டு விட்டது. சிங்களப் பேரினவாத சோவனிச அரசு மனித நாகரீ கத்தை முற்றுகக் கைகழுவி விட்டு மிருகத்தனத்தில் முழுமை யாய் ஈடுபட்டுவிட்டது.

முதலாளித்துவ சுரண்டும் வர்க்கம்; பன்னாட்டு மூலதன ஆதிபத்தியம்; இனவெறிப் பாதுகாப்புடைய மத அமைப்பு; இத்தனையும் கைகோர்த்துக் கொண்டு ஊக்குவித்து வந்த முரண்பாடுகள் இப்போதுமுற்றி வெடிக்கத் தொடங்கிவிட்டன. இதற்கு முன் இதே அளவில் இல்லாவிட்டாலும், இதே வகையில் நடைபெற்ற 1977 ஆகஸ்ட் கலவரத்தில், நடை பெற்ற நிகழ்ச்சிகளும் விளைவு களும், இலங்கையர்களால்— குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்களால் சரியாகப் பயிலப் பட்டிருக்குமாளுல், இப் பொழுது நடந்தது இன்னொரு கலவரமாகாமல் இரு இனங் களுக்கிடையேயான வர்க்கத் தீர்வை உள்ளடக்கிய போராக இருந்திருக்கக்கூடும். அவ்வாறு ஏற்பட்டிருந்தால், முடிவுகள் தமிழர்களின் தொடர் துயரங் களுக்கு முற்றுப்புள்ளி வைத் திருக்கக்கூடும்.

இனி எதிர்காலத்தில்செயல் பாடுகளை சரியாகத் தீர் மானிக்கவாவது, 1977 ஆகஸ்ட் இனக்கலவரத்தைப் பற்றிய படிப்பினைகள் உதவலாம் இந்த இலக்கைக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியம் தான் 'லங்கா ராணி'. சரித்திர நாவல் என்ற பெயரில் யதார்த் தத்திற்கு விரோதமான கொச் சைத் தனங்கள் மட்டுமே எழுத் தாக்கப்படுவது தமிழ் நாவலுல கில் வழக்கம்! இடிந்த கோட்டை களின் இடுக்குகளில் சரித்திர நாயகிகளின் சதைக் கதை களைத் தேடியலையும் சாண் டில்யத் தனமான கதைகளுக்கே தற்போது சரித்திர நாவல்கள் என்று பெயர். ஆனுல் இன, மொழி, வாழ்நிலை, வரலாற்று உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடும் போராளி களின் செயற்பாடுகளைச் சித் தரிப்பனவே சரியான வரலாற்று நாவல்களாக இருக்க முடியும். இந்த வகையில் லங்கா ராணி நிகழ்ச்சிப் போக்குகளின் நிதரி சன வடிவமான ஒரு மிகச்சிறந்த வரலாற்றுப் படைப்பாகத் திகழ்கிறது. 77 கலவரத்தின் இரத்தவாடையும், அதனுல் எழுச்சி பெற்ற இளைஞர்களின் புரட்சி மணமும் பதிந்து நிலைத் திருக்கிறது இந்த நாவலில்.

77 கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட இலங்கைத் தமி ழர்கள் கொழும்பு அகதிகள் முகாம்களில் நிரம்பி வழிந்தனர் பரிவோடு அவர்களுக்கு உதவி புரிய வந்த தமிழ் இளைஞர் களும், மாணவர்களும் பம்பரம் போல் சுழன்று பணியாற்றினர். உடனே, அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டாலன்றி உயிர் பிழைக்க முடியாது. கொழும் புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் இருப்பது இருநூறு மைல்கள்தான்! ஆனுல் சிங் களப் பகுதிகளுக்கு ஊடாகப் பயணம் அமையுமென்பதால் பாதுகாப்பு இல்லை. எனவே, ஏறத்தாழ 600 மைல்கள் கடற் பயணம் செய்து அவர்களைக் கரை சேர்க்கும் நோக்கத்தோடு 'லங்கா ராணி' என்கிற கப்பல் புறப்பட்டது. பயணகாலமான அந்த மூன்றுநாட்களில்தான் எத்தனை நிகழ்ச்சிகள்! எத் தனைப் பாத்திரங்கள்! எவ் வளவு உணர்ச்சிகள்! எத்தனை விவாதங்கள்; எப்படிப்பட்ட தீர்வுகள்! ஓ! அதுவொரு ஈடு இணையில்லா துன்பியல் நாட கம். பரபரப்பான நிகழ்ச்சி களின் சரியான படப்பிடிப்பு, எதிர்கால செயல்பாட்டிற்கான திட்டவரையறை! உணர்ச்சிக் குமுறல்களின் ஒருமித்த வடி கால்! தீர்க்கமான இலக்கை நோக்கி வடிவமைக்கப்பட்ட ஒருவகைப் போர்ச்சாதனமாக இந்த நாவலைப் படைத்துள் ளார் ஆசிரியர் அருளர்.

இலங்கா ராணி கப்பலில் பயணம் செய்யும் ஏறத்தாழ ஆயிரத்து இருநூறு அகதிகளில் எல்லோரும் தமிழர்கள்தான் என்ருலும், அவர்களுக்குள் தான் எத்தனை வேறுபாடு! வயோதிகர்கள்—குழந்தைகள்— காயம்பட்டவர்கள்—ஓடுகிற அவசரத்தில் விலை உயர்ந்த பொருட்களை மாத்திரம் பெட் டியில் அடைத்துக் கொண்டு வந்தவர்கள்—எடுத்துக்கொள்ள ஏதுமே இல்லாதவர்கள்! இது ஒருவகை. இன்னொரு வகையினர் இதற்கு நேர்மாறு னவர்கள்—மூன்று இரும்புப் பெட்டிகள், நான்கு சூட்கேசு கள், ஆறு சிலைப் பொட்டலங் கள், ஒரு கிளிக்கூண்டு, ஒரு நாய்க்குட்டி — இத்தனை பர



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது தோழர்கள் மறைந்தவர்களல்ல; மறைக்கப்பட்டவர்களுமல்ல; அவர்கள் முன்னெப்போதையும்விட இப்போது தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சடலங்களிலிருந்து அவர்களின் கருத்துக்கள் வெற்றிப் பெருக்குடன் வெளிப்படுவதைக் கண்டு இந்தக் கொலைகாரர்கள் ஆச்சரியப்படுவார்கள். தீர்க்கதரிசியின் வார்த்தைகளில் கூறுவதானால், ''இறந்தவர்களின் சமாதியருகே கண்ணீர் சிந்துவதற்கும் ஓர் எல்லையுண்டு. தாய் நாட்டின் மீதும், அதன் புகழின் மீதும் எல்லையற்ற அன்பு செலுத்துதான் அந்த எல்லை; இந்த அன்பு என்றும் தோல்வியடைவதில்லை; நம்பிக்கை இழப்பதில்லை; சுருங்கி விடுவதில்லை. தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்;

தாய் நாட்டின் மடியில் ஒருவன் உயிர் விடும் போது துன்பம் முடிகிறது! சிறைச்சங்கிலிகள் தெறிக்கின்றன. இறுதியில் அந்த மரணத்துடன் வாழ்க்கையும் துவங்குகிறது.

''வரலாறு என்னை விடுதலை செய்யும்''

—ஃபிடல் காஸ்ட்ரோ''

---

பரப்பிலும், கலவரத்திலும்கூட இவ்வளவையும் சுமந்துகொண்டு கப்பலில் பயணம் செய்யும் அந்த நாகரிகத் தமிழ்க் குடும்பத்தில் அந்த பெல்பாட்டம் அணிந்த நங்கை அந்த பாமரேனியன் நாய்க்குட்டியைப் பிரியவேயில்லை.

எல்லாம் தெரிந்தவர்போல் எகத்தாளமாகக் கதைக்கும் ஒன்று மறியா—ஆனால் சுயநலத்தில் எப்போதும் கண்ணுயிருக்கிற கொழும்பு வியாபாரிஒருபுறம். நாலும் தெரிந்து விவரமாகப் புட்டுப்புட்டு வைக்கும் பெரியவர் நாகலிங்கம் ஒருபுறம். கலவர நிகழ்ச்சிகள் தந்த கலக்கம் இன்னும் நீங்காத முனியாண்டி ஒருபுறம். கச்சத்தீவு ஒரு பெரிய நாடு போலவும், இலங்கை ஏகாதிபத்தியத்தின் போலீசும், இராணுவமும் போரிட்டு அந்நாட்டைப்பெற்றுவிட்டதுபோலவும் உண்மையிலேயே நம்பிக்கொண்டிருக்கிற நீர்க்கொழும்பு இளைஞன் ஒருபுறம். இவர்களுக்கிடையே எவ்வளவு கீழான பணியையும் முகஞ்சுளிக்காமல் ஓடியாடித் தொண்டாக செய்கிற மலையக இளம் பெண் இராணி ஒருபுறம். நடந்தவைகளை மதிப்பிட்டு, நடக்க இருப்பவைகளைக் கணித்து, என்ன செய்யவேண்டும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதில் தீர்மானமாய் இருக்கிற, அவைகளை அற்புதமாய் விளக்கவும் தெரிந்திருக்கிற வேட்டிக்கார இளைஞன் ஒருபுறம். மற்றும் அகதிகளுக்குத் தொண்டு செய்வதில் தோய்ந்துபோய், அதே நேரத்தில் தமதுதேசத்தைத்தாம் எவ்விலை கொடுத்தேனும் பெற்றேயாக வேண்டும் என்கின்ற புரட்சி உணர்வு பொங்கித் துடிக்கும் சரவணன், குமார், தேவன் போன்ற இளைஞர்கள் ஒருபுறம். இவர்களுக்கு உதவியாய் இருக்கிற டாக்டர் நற்குணம் ஒருபுறம். இத்தனை வகைப்பட்டத் தமிழர்களையும் சுமந்துகொண்டு ஆடி அசைந்து நீலக் கடலில் நிதானமாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது லங்காராணி.

சிங்கள சோவனிச பேரின வாதம், இராணுவத்தின் துணையோடும் காடையர்களின் உதவியோடும், அண்மையில் நடத்திய தமிழின அழிப்பு தமிழகத்திலும், இந்தியாவிலும் பொதுமக்களிடையே ஒரு பேரெழுச்சியை உண்டாக்கியது. ஆனால் இலங்கையின் நிலைப்பாடுகள் சரிவரப் புரிந்து கொள்ளப்படாமையால், இந்த எழுச்சி விழலுக்கிறைத்த நீராயிற்று. ஆளுக்கொரு விதமாய் தகவல் தந்தும், அவரவர் கற்பனைக் கேற்ப வரலாற்றைத் திரித்துரைத்தும் இனி நடக்க வேண்டியவற்றைப் பற்றிய கணிப்புகளை மிகத்தாராளமாக குழப்பிப் போட்டனர். லங்காராணியில் வரும் வேட்டிக்காரர் இளைஞன் கதாபாத்திரம் நீர்க்கொழும்பு இளைஞர்களுக்கு விளக்கம் தருவதாக வரும் ஒரு சில பக்கங்கள் ஈழவரலாற்றின் மிகத் துல்லியமான கையடக்கப் பதிப்பாக விளங்குகின்றன. நீண்ட போராட்ட வரலாற்றை இவ்வளவுதெளிவாக சில பக்கங்களிலேயே சுவைபட விபரித்திருப்பது கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டுவதும் சாத்தியமே என்னும்படியாக அமைந்துள்ளது. தங்கள் கல்வியையோ வேலையையோ, காணிகளையோ சிங்களவர் பறித்துக்கொள்

---

''மார்க்சிஸம், அராஜகவாதம் ஆகிய இவ்விரண்டும் சோஷலிஸத்தை அமைப்பதற்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்ட போதிலும், இவை இரண்டும் முற்றிலும் மாறுபட்ட கொள்கையின் அடிப்படையில் எழுந்தவை. அராஜகவாதம் தனிமனிதனை மையமாகக் கொண்டது. தனிமனிதனின் விடுதலை பொதுமக்களின் விடுதலைக்கு முதற்படியாகும். தனிமனிதன் விடுதலை பெறும் வரை பொது மக்களின் விடுதலை சாத்தியமில்லை; எனவே ''ஒவ்வொன்றும் தனிநபருக்காக'' என்பது அராஜகவாதிகளின் கொள்கை. மார்க்ஸிஸம் பொது மக்களை மையமாகக் கொண்டது. தனிமனிதனின் விடுதலைக்கு முதற்படி பொது மக்களின் விடுதலையே ஆகும், அதாவது பொதுமக்கள் விடுதலை பெறும் வரை தனிமனிதனின் விடுதலை சாத்தியமில்லை; எனவே ஒவ்வொன்றும் மக்களுக்காக'' என்பது மார்க்சியக் கோட்பாடு. எனவே, அராஜகவாதமும் மார்க்சிஸமும் போராட்ட தந்திரத்தில் மாறுபட்டவை என்பது மட்டு அல்ல; அவை ஒன்றையொன்று மறுக்கின்ற இருவேறு கோட்பாடுகளே.''

''அராஜகவாதமா சோஷலிஸமா''

—ஜே. வி. ஸ்டாலின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எங்களுடைய விடுதலை மொழியை அழிக்கிறார்கள் என்று கூறித் தனி நாடு அமைத்துக் கொண்டு மற்ற வற்றைச் சீர்திருத்திக் கொள்ள லாம் என்பதல்ல. எல்லா விலங் குகளையும் உடைத்தெறிந்து கொண்டு சமதர்ம சமுதாய மாக எழுவதுதான் எங்கள் இனத்தின் உண்மையான விடு தலைக்கு வழிவகுக்கும். வெள் ளைச்சாமி, உன்னுடைய சமூ கம் இலட்சியமற்று காலங் கடந்துபோன கட்டுக்கோப்பு களால் கட்டுண்டு கொள்ளைக் காரர்களால் ஏமாற்று எத்தர் களின் வேட்டைக் காடாகக் கிடந்து அழிந்தது போதும். இதற்கு முடிவு கட்ட வேண்டிய காலம் வந்து விட்டது. அன்பும் அறமும் நிறைவு பெற்ற அந்தப் புதிய தமிழனுடைய சமுதாயம் இங்கு வேண்டும். திட்டங்களை எங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்குப் படிபடியாக நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால் இதற்கான உழைக்கும் மக்களின் ஆட்சியை, அரசை, அதிகாரத்தை ஒரேயடியாக நிறுவிவிட வேண்டும். எங்களு டைய போராட்டம் இந்த அடிப்படையில்தான் அமைய வேண்டும். இதற்குத் திரமுடன் இறங்கிச் செயல்படவேண்டும். தொடங்க வேண்டியதுதான் எதற்கும் நீ முதலில் பண் ணைக்குவா''

—லங்கா ராணி

கிறார்கள் என்பதற்காக மட்டும் தமிழர்கள் அங்கு போராட வில்லை.

தங்கள் பாரம்பரிய பிரதே சத்தில் தங்கள் வாழ் நிலையின் சுயநிர்ணய உரிமையை தாங்கள் பெறுவதற்கும் சமதர்ம ஆட்சி அமைப்பை ஏற்படுத்திக்கொள் வதற்குமான ஒரு பெரிய இலக்கை முன்னிறுத்தியே அவர்கள் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தை நாட் டுப்பிரிவினைக்கான போராட்டம் என்றோ, பிழைக்கப்போன இடத்தில் ஏன் போராடவேண் டும் என்றோ கொச்சைப்படுத் தும் இந்தியப் பிரமுகர்களும், அவர்கள் கூற்றை அப்படியே ஏற்கும் மக்களும் ஊன்றிப் படிக் கவும், உண்மையை உணரவும் இந்த நாவலில் அநேக செய்தி உள்ளன.

ஏறத்தாழ 150 ஆண்டு களுக்கு முன்னால் ஆதிக்க வெள் ளையர்களால் தென்னிந்திய கிராமங்களிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு, தேயிலைத் தோட்டங்களில் தங்கள் இரத் தத்தை வியர்வையாக்கி உழைத்து, பன்றிக் குடிசைகளுக் கும் கீழான லயங்களில் அடை பட்டு, சாதியில் கீழாய் சமூகத் தில் தாழ்வாய் பொருளாதாரத் தில் சோற்றுக்கும் துணைக்குமே போதாத வருமானத்தில் இன்று வரை உழன்று வரும் மலையகத் தோட்டத் தொழிலாளிகள் உண்மையான பட்டாளிகள், அவர்கள் இழப்பதற்கு ஏதுமில் லாதவர்கள். போராட்டம் என்பது அவர்கள் வாழ்வியலின் அத்தியாவசியக் கூறு. அவர் களை இணைத்துக்கொள்ளா மல் ஈழ மக்கள் போராட்டம் நடை பெறமுடியாது. இந்த உண்மையைப் பட்டவர்த்தன மாக இந்த நாவல் வெளிப் படுத்துகிறது. இன்றைக்கும் கூடதொண்டமான்களும், செல் லச்சாமிகளும் சிறிமாவோ- சாஸ்திரி ஒப்பந்தப்படி இங்கே கொண்டுவந்து கவிழ்க்கப்பட்ட நாலே முக்கால் லட்சம் தோட் டத் தொழிலாளர்களைத் தவிர மீதியிருப்போரை இங்கே ஓட்டிக்கொண்டு வந்துவிட பெரும்பாடு பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவு பெரிய அக்கிரமம் என்பதைத் தொலை நோக்கோடு இந்த நாவல் தெளிவு படுத்தியிருக் கிறது.

எந்தப் போராட்டத்திலும் தத்துவம், ஆயுதம் மக்கள்சக்தி, ஆகிய மூன்றும் முரண்பாடின்றி தகுந்த விதத்தில் இணைந்தாக வேண்டும். இதில் பிரச்சனை கள் சரியாகவும் வரலாற்று ரீதி யாகவும், இயங்கியல் பூர்வமாக வும் புரிந்து கொள்ளப்படுதல் அவசியம். ஈழப் பிரச்சனைக்கு வெறும் கோஷங்களும், வீண் விவாதங்களும், நெடும்பயணங் களும் பேச்சுவார்த்தைகளும் எள்ளளவும் பயன்படப்போவ தில்லை தத்துவத் தெளிவின் அடிப்படையில், மக்கள் சக்தி யின் அரவணைப்பில் நடை பெறும் ஆயுதம் தாங்கிய போராட்டமே இதற்கொரு நிரந்தரத் தீர்வை உண்டாக்கும். அதோ! காங்கேசன் துறையில் கம்பீரமாக வந்துநிற்கும் லங்கா ராணியில இருந்து ஏறத்தாழ அகதிகள் எல்லோரும் இறங்கிப் போய்க்கொண்டிருக் கின்றனர். போராட்டமே என்று புரிந்து கொண்ட இளைஞன் சரவணன் கத்தியால் தன் விரல்களைக் கீறிக்கொண்டு அதில் பொழிகிற இரத்தத்தால் தன் புரட்சித் துடிப்பை எல்லாம் உள்ளடக்கி 'ஈழப் புரட்சி வெல்க' என்று எழுதி முடிக்கிறான். வேட்டிக் கார இளைஞன் அவனுக்கு உதவிக்கொண்டு இருக்கிறான். கப்பலின் கனத்த இரும்புச்சுவற் றின் மேல் சூரிய கிரணங்கள் பட்டுப் பளபளக்க கொட்டிக் கொண்டிருக்கிற இரத்தத்துளி கள் புரட்சியை நோக்கி மக்களுக்கு அழைப்பு விடுத்துக் கின்றன. லங்காராணி நாவல் இங்கே முடிகிறது. போராட் டம் தொடர்கிறது. ●

சிந்தனைக்கு...

இலங்கை அரசின் தலைவரு டன் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அரைமணி நேரம் அவசரப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டனர். இலங் கைக்கு அமெரிக்க ஏகாதிபத்தி யத்தின் அடக்குமுறை உதவி கள் யாவும் கிடைப்பதற்கான பகிரங்க அறிவிப்பு இது.

''இலங்கையில் தமிழர்கள் கொடுமைக்குள்ளாவதை கண் டும் கவனிக்காமல் இனிமேலும் இருக்கமுடியாது'' இவ்வாறு இந்தியப் பிரதமர் இந்திரா சைபிரஸில் வைத்துக் கூறியிருந் தார். இது இந்திரா காந்தி இந் யாவில் இருந்தபடி விட்ட அறிக்கைகளிலும் முக்கியத்துவ முடையதாக அரசியல் அவதானி கள் கருதுகிறார்கள். ●



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொண்டமானின் நடவடிக்கைகள் சுயநலத்தின் சூட்சுமமே!

இலங்கையில் மிக அதிகமான உறுப்பினர்களைக்கொண்ட ஒரு சங்கமாக விளங்கி வருவதுதொண்டமானின் தலைமையிலான இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் என்பது அனைவரும் அறிந்ததே. இச்சங்கத்தினதும், ஏனைய பல சங்கங்களினதும் நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கும் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களோ அல்லது அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவர்களோ அல்லர். மாறாக வாணிப நோக்கத்திற்காக இலங்கைக்கு சென்றவர்களும் அவர்களின் வாரிசுகளும்தான். இல்லாவிட்டால் 500 ஏக்கருக்கும் அதிகமான தேயிலைத் தோட்டத்தின். உரிமையாளரான திரு.சௌ தொண்டமான் தொழிலாளர்களின் தலைவராக முடியுமா? அல்லது பெரும் வர்த்தகரான திரு. அசீசு ஜனநாயகத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக விளங்க முடியுமா? இவர்கள் இருவரும் வர்த்தக நோக்கத்திற்காக இலங்கை சென்று தமது நோக்கதிற்கு சாதகமாக தோட்டத்தொழிலாளர்களை உபயோகிக்க முயன்று அதில் வெற்றியும் கண்டார்கள்.

தொழிலாளர்களின் பால் இவர்களுக்கு உண்மையான அக்கறை இருந்திருந்தால் அத்தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராட்டம் நடத்தியிருப்பார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் இவர்களுக்கான ஆதரவை விற்று வந்த இவர்கள் அதற்குப் பதிலாக பதவிகளை பெற்றுக் கொண்டார்களேயன்றி சிறு சிறு உரிமைகளைக்கூட பெற்றுத்தரப் பாடுபடவில்லை. தண்ணீர் வசதி, இன்னும் இது போன்ற தொழில் ரீதியான பிரச்சனைகள் ஏற்பட்ட போது களத்தில் இறங்கி வெறும் சலுகை அடிப்படையில் இப் பிரச்சனைகளில் சமரசங் கண்டார்களேயன்றி ஒட்டுமொத்தமான உரிமைகளுக்காக குரல் கொடுக்கவில்லை. 1948-ல் வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும் சரிஅல்லது 1964ல் சிறிமாவோசாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டு நாடு கடத்தப்பட்ட போதும் சரி, அல்லது அதற்குப்பின்னர் தோட்டங்கள் தேசிய மயம் என்ற போர்வையில் சிங்கள மயம் ஆக்கப்பட்ட போதும் சரி இந்த மக்களின் அரசியல், குடி உரிமைகளுக்கான போராட்டத்தை இத் தொழிற் சங்கத் தலைமைகள் நடத்தவில்லை. பதிலுக்கு சந்தா வசூலிப்பதிலும் தொழிற் தகராறுகளுக்கு சமரசம் காண்பதுமே இவர்களது சமூகப்பணியாயிற்று. இதன் விளைவுதான் இன்றைய மலையக மக்களின் துயரம்.

1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி தனி நாடு கோரிக்கையை முன் வைத்தபோது அவ் அமைப்பின் தலைவர்களுள் ஒருவராக இருந்து கொண்டே தொண்டமான் அவசரம் அவசரமாக அட்டன் நகரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு மகாநாட்டைக் கூட்டி மலையக மக்களின் பிரச்சனைகளுக்கு தனி நாடு தீர்வாகாது என்று அறிவித்தார். இவ்வாறு அறிவிப்பு செய்ததின் மூலம் பயங்கர விளைவுகளை மலையக மக்கள் சந்திக்க விருப்பவதிலிருந்து மீட்டு விட்டதாக மார்பு தட்டிக்கொண்டார். ஆனால் நடந்தது என்ன? 1977-ன் கலவரத்தில் அப்பாவி மலையக மக்கள் கொடுரமாக பாதிக்கப்பட்டனர். ஒவ்வொரு கலவரம் ஏற்பட்டபோதும் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடிவருவது பூர்வீகத் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குத்தான் அவ்வாறு வந்த மலையகத் தமிழர்களில் பெரும்பான்மையோர் இப்பகுதிகளில் நிரந்தரமாக குடியேறி வாழ்ந்தும் வருகின்றனர். 1977 கலவரத்தையடுத்து இவ்வாறு குடிபெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகமாகியதும் இத் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு அச்சமேற்பட்டது.

இத்தகைய அச்சத்தின் காரணத்தினால் மலையக மக்கள் ஒரு தனித் தேசிய இனம் என்றும் வடக்கு கிழக்கில் பூர்வீகத் தமிழர்களோடு சொந்தபந்த மற்றவர்கள் என்றும் ஒரு கருத்தை முன்வைத்தார்கள். இதன்மூலம் ஏனைய தமிழ் மக்களின் போராட்டத்திற்கும் மலையக மக்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்றும் மலையக மக்கள் தனி நாடு போராட்டத்திற்கு ஆதரவு இல்லையென்றும் கதையளந்தார். ''தொழிலாளர்களே நீங்கள் தனியான ஒரு தேசிய இனம் எந்த சமயத்திலும் இலங்கையில் வாழும் பூர்வீகத் தமிழர்களோடு ஒத்துப்போக முடியாதவர்கள், உங்கள் தாயகம் மலையகமே'' என்ற தொண்டமானின் வாதங்கள் யாவும் பேரின வாதப் புயலில் அடிப்பட்டுப்போயின. 1981ம் ஆண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலவரத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் களை இரத்தினபுரி என்ற இடத்தில் சென்று பார்த்த ஜனாதிபதி அவர்களிடம் உங்களுக்கு ஈழம் தெரியுமா? எனக் கேட்கிறார் என்றால் அர்த்தம் என்ன?

எங்கே ஒரு தமிழன் பாதிக்கப்பட்டாலும் அவன் ஈழத்திற்காகத்தான் தாக்கப்படுகின் றான், எனவே ஈழத்திற்கான போராட்டத்தி லிருந்து மலையக மக்களை பிரித்துவிட முடி யாது; ஈழத் தேசிய இனத்தின் முதுகெலும் பான பாட்டாளி வர்க்கம் மலையக மக்களே; என்பது இப்போதாவது இச் சந்தர்ப்ப வாத தலைவர்களால் உணரப்படவேண்டும்.

தமிழர்களின் போராட்டத்திலிருந்து மலையக மக்களை பிரிக்க முயன்ற முயலும் தொண்டமான் தானும் அமைச்சராக உள்ள அரசினால்கூட அத் தொழிலாளர்களுக்கு பாது காப்புத்தர முடியவில்லை என்பதை உணர்ந் தாவது பதவியைத் துறந்திருக்கவேண்டும். ஆனால் அப்படியேதும் செய்யாமல்-பதவிச் சுகத்தை துறக்காமலே இனியும் ஒரு கலகம் வெடித்தால் 7-லட்சம் மக்களோடு இந்தி யாவிற்கு தஞ்சம் கோரப்போவதாக அறிவித் திருப்பது கோழைத் தனமானதும் கேலிக் குரியதும் ஆகும்.

இந்தியா மலையக மக்களை வரவேற்கத் தயாராக இல்லை என்பது கசப்பான உண்மை. ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்துவிட்ட நாலு லட்சம் மக்களும் மிகவும் அவலமான வாழ்க்கை வாழ்வதை எண்ணிப் பார்க்க வேண்டும். குடிபெயர்ந்து வருவோருக்கான அறிவிக்கப்பட்ட பல சலுகைள் கிடைக்காத நிலையிலும் திறக்கப்பட்ட அரசபண்ணைக் கழகங்கள் கூட மூடப்பட்டுக்கிடக்கும் இழி நிலையிலும் ஏழு இலட்சம் மக்களைத் தாங்கிக் கொள்ளுமா? என்பதைப் பொறுப்பில் உள் ளோர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## மலையக மக்களும் தாய் மண் பாசமும்

மலையக மக்களினது தாய் மண் பாசத் தின் சின்னமாக-தோட்டத் தொழிலாளர் களின் உரிமை வேட்கையின் அடையாளமாக திகழ்வது டெல்டா தோட்டத்தில் தொழி லாளர் நடத்திய கிளர்ச்சி. 1976ல் டெல்டா தோட்டம் தேசிய மயமாக்கப்பட்டபோது— இல்லை சிங்களமயமாக்க முயற்சிகள் நடந்த போது அத் தோட்டத் தொழிலாளர்கள் முனைப்புடன் எதிர்த்தனர். தோட்ட நிலத்தை அளந்து பிரிக்க வந்த நில அளவை யாளர் (SURVEYOR) இருமுறை விரட்டி யடிக்கப்பட்டார். மூன்றாவது முறை போலி சுடன் நிலம் அளக்க முற்பட்ட போதிலும் தொழிலாளர் மூர்க்கமாக எதிர்த்தனர். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது.

சிவனு—லட்சுமணன் என்ற இளைஞன் கொல்லப்பட்டான். தொடர்ந்துவந்த சிங்களக் காடையர்களால் டெல்டா தோட்டமும் டெவன் தோட்டமும் கொளுத்தப்பட்டது. அரசையும் அதன் யந்திரங்களையும் ஒரு சேர எதிர்க்கும் வலிமையற்று இருந்த நிராயுத பாணிகளாகவிருந்த அத் தொழிலாளர்கள் அனாதைகளாக்கப்பட்டனர்.

அந்த சிவனு லட்சுமனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட திரு. தொண்டமான் ''இனி மேல்மலையகத்தில் எவர் உயிராவது பறிக்கப் படுமானால் அது எனது பிணத்தின் மேல்தான் நடக்கும்'' என்று வீராப்புக் கூட பேசினார். அதன் பின்னர் இது போல எத்தனையோ கொலைகள்? கலவரத்திற்கு முன்பாக அவரது தேர்தல் தொகுதியிலே ராசா, செபமணி, குணசீலன், போன்ற இளைஞர்கள் இதே போன்ற காரணங்களுக்காகக் கொல்லப் பட்டார்களே?

### முடிவாக

''எனது 30 வருட அரசியல் வாழ்வின் அனுபவத்தில் சொல்கிறேன். ஜே. ஆரைப் போன்ற நேர்மை, துணிவுமிக்க ஒரு அரசியல் வாதியை நான் பார்த்ததில்லை'' என ஜே ஆரை புகழ்ந்த தொண்டமானால் கூட அதே ஜே. ஆர். அரசிடமிருந்து மலையக மக்களைப் பாதுகாக்க முடியவில்லை! அதுவும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட ஜே ஆருக்கு வாக்குப் போடாவிட்டால் கலகம் வெடிக்கும் பாதிக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தி மலையக மக்களின் வாக்குகளை ஜே ஆருக்குப் பெறுத் தந்த போதும் கூட அந்த மக்களைப் பாதுகாக்க முடியவில்லை.

எனவே இனி மேலாவது தொண்டமான் கள் தமிழ் பேசும் மக்களது போராட்டத் திலிருந்து, மலையக மக்களைப் பிரிக்கின்ற சூழ்ச்சி சதி வேலைகளைக் கைவிட்டு -ஈழத் தின் விடுதலைப் போரில் பங்கேற்க முன் வர வேண்டும். அதன் மூலம் மட்டுமே மலையக மக்களின் எதிர்காலத்தை பாது காத்துக் கொள்வது மட்டுமின்றி அவர்களது உரிமைகளையும் உடமைகளையும் வென் றெடுக்க முடியும். அப்போது தான் சிவனு-லட்சுமணன் போன்ற எண்ணற்ற தியாகி களின் எண்ண வேட்கையும் பூர்த்தியாகும்.❋



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேற்றைய கனவும்

வங்காள விரிகுடாவின்
அலை மோதும் கரை தோறும்
உங்கள் இரத்தப் படிவுகளில்
பாதங்கள் புதைகையில்

கரை கடக்கும்
வாடைக்காற்றோ
ஓலமிடும் அழுகைகளாய்
பிணவாடை வீச்சங்களாய்
உங்களை உரசுகையில்

இலங்கையின் எரிவுகள்
இந்து மாக் கடலின்
கலங்கரை விளக்கமாய்
திசைகளையே மயக்குகையில்—

கவிதையில் நான் என்ன
கண்ணீரா சிந்திடுவேன்
கண்ணீர்கள் சோகத்தின்
அளவு கோல் தான் ஆயிடுமா?--

நேற்றைய இரவுகளில்
எப்படித்தான் உறங்கினோம்
எங்களின் வாழ்வுக்கு
என்ன தான் ஆயிற்று!

கால்கள் சறுக்கும்
நக்கிள்ஸ் சரிவுகளில்
இரத்தத்தை விதைத்து
கொழுந்து கிள்ளும்-என் தங்கை

கஞ்சிச் சட்டியை
வயிற்றுக்குள் புதைத்து
களத்து மேட்டினில்
நாற்று நடும்-என் அக்கா

கோபுர கலசத்தை
கீழாக்கும் கரும்பனையின்
உச்சியில் பாளைதனை,
கத்தி கொண்டு சீவும்
—என் அண்ணன்

பாய் விரிக்கும் படகினில்
துடுப்புகளை வலிக்கையில்
ஏலேலோ பாட்டிசைத்து
கை சோரும்—என் மாமன்

சூரியன் நெருப்பாக்கும்
செம்மண் பரப்பினில்
கோமணத்துடன் என் அப்பன்
துலாக் கொடி மிதிக்கும்

சோற்றுப் பருக்கையை
நசித்து பதம் பார்த்து
எங்களின் வாழ்வுக்கு
விறகாய் நெருப்புண்ணும்
—என் அன்னை

சிமினி வெளிச்சத்தில்
எழுத்துண்ட உறக்கத்தில்
சிறுகு வேலிக்குள் உலகங்கள்
அமைக்க
கண்களை மூடும்—என் தம்பி

சூரிய இறப்புகளில்
இப்படியாய் கண் மூடினோம்
நேற்றைய இரவுகளில்
இப்படித்தான் உறங்கினோம்
கனவுகள் கற்பனைகள்
பூப் பூவாய் சொரிந்தன.

எங்களின் கனவுகளாய்
நாளைய வாழ்வுகளும்,
நெல்மணிக் கதிர்களும்,
சோலைக் குயில்களின்
தேமிசைப்புகளும்

எங்கள் விதைப்புகளை
நாங்களே அறுவடை
செய்தலும்
எங்கள் மொழியால்
ஐநாவில் கைகுலுக்கும்

கலைச்செல்வம் தேடும்
எட்டுத் திசைகளையும்
எங்களில் மையமாக்கும்

கடல் திரை வயலில் பாச்சும்
சூரியனில் அடுப்பெரிக்கும்,
அணுவைத் துளைக்கும்
அண்டத்தை பிளக்கும்

பூச்சொரியும் கனவுகளை
உடைக்கும் தடைகளை
நொறுக்க
இறுக்கும் கண்ணிகளை அறுக்க
கைகளை உயர்த்தி
மெல்லென நிமிர்கையில்—

இரத்தங்களால் பாய்கள்
நனைந்து போயிற்று.
வேட்டுகளால் தூக்கம்
கலைந்து போயிற்று.

இருளே எங்களுக்கு
நிச்சயமாயிற்று
இருட்டினில் நாங்கள்
எங்களை தேடினோம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய வாழ்வும்

எங்களில் பல பேர்
தொலைந்து போயினர்
எங்களைச் சுற்றிலும்
காக்கிச் சட்டைகள்

நேட்டோக்கள் றைபிள்கள்
வசந்தக் கனவுகள்
கண் சிமிட்டும் நிழல்களாய்
உடைந்த பூக்களாய் - இப்போ

எங்கள் பூந்தோட்டத்தில்
மலர்களில்லை. மரங்களில்லை.
கூவிக் குரலெழுப்பும்
குயில்கள் தான் எதுவுமில்லை
எம் நாடு சாம்பல் மேடாய்
இரத்தக் கறை சிதறல்களாய்
எங்கள் உயிர் துடிகின்றது
வதையின் கதைதொடர்கின்றது
நிராயுத பாணிகளாய்

வீழ்ந்துதான் போய்விட்டோம்.
எங்களின் முகங்களை
இழந்து தான் போய் விட்டோம்

மக்கள் படை கட்டாமல்
கருத்து வியூகம் அமைக்காமல்
சிலர் முன்னோடி சென்ற போது
ஒன்றாய் நாங்களும் வழுக்கி
வீழ்ந்திட்டோம்

நிராதயுதாபாணிகளாய் வீழ்ந்து
தான் போயினோம்

இப்போது எங்களுக்கு
கருவிகள் தேவை
அன்னிய இராணுவமல்ல
உதவிகள் தேவை
அன்னிய படை நடத்தலல்ல
யாரும் எங்களை
கொன்றதாய் நினையாதீர்

எவர் தான் எங்களை
கொன்றிட முடியும்

ஒவ்வொரு துடிப்பிலும்
உயிர்ப்புடன் நாங்களே
எரிந்த எங்கள்
குடிசையில் இருந்தும்
சாம்பல் பூத்த
தெருக்களில் இருந்தும்
ஒவ்வொரு இரத்த
சிதறலில் இருந்தும்
நாங்களே மீண்டும் எழுந்து
வருவோம்
நாங்களே மீண்டும் எழுந்து
வருவோம்
எங்களின் தாகம் ஈழம் மட்டுமே
கரங்களுக்கு தேவை கருவிகள்
மட்டுமே

— கி. பீ. அரவிந்தன்

## சிறை உடைப்பு - சிறப்பு நிகழ்ச்சி

செப்டம்பர் 27-ம் திகதி மட்டக்களப்புச் சிறைச்சாலை தகர்த்தெறியப்பட்டு விடுதலைப் போராளிகள் வீரமுடன் வெளியேறிய நிகழ்ச்சி நடந்தேறியிருந்தது.

இது ஒரு வெறும் சிறை உடைப்புச் செய்தியல்ல. சீருடை தரித்த சிங்களத் காடையர்களினால் அல்லும் பகலும் பல வருடங்களாக கொடுமை மிக்க சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட அரசியல் போராளிகளின் வெளியேற்றமிது. அரசின் ஆதரவுடன் 52 விடுதலைப் போராளிகளின் தலைகளை சிதைத்தும், கண்களை தோண்டியும் துடிக்கத் துடிக்க உயிர்ப்பலி எடுத்த சிங்கள காடைகளிடமிருந்து மயிரிழையில் உயிர்த் தப்பி வந்தவர்களை உள்ளடக்கிய வெளியேற்றமிது.

உலக வரலாற்றில் கியூபா, பிரான்ஸ், அயர்லாந்து போன்ற நாடுகளில் நிகழ்ந்த சிறை உடைப்புகளுடன் கூடவே ஈழத்தில் நடந்த மட்டக் களப்பு சிறை உடைப்பும் வீரம் செறிந்த நடவடிக்கைகளுடன் இணைக்க கூடியதே. ஈழப் போராட்டத்தில் இது கால வரையில் நடை பெற்று வந்திருந்த அரசு எதிர்ப்பு வன்முறை நடவடிக்கைகளிலும் பார்க்க இது ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ள தென்பதே புரட்சிச் சக்திகளின் ஏகோபித்த முடிவாக இருக்க முடியும். அத்துடன் பஸ்ரில் சிறைச்சாலை உடைப்பு எப்படி பிரான்சுப் புரட்சிக்கு உந்து சக்தியாக விருந்ததோ; அது போல் மட்டக் களப்புச் சிறைச்சாலை உடைப்பு ஈழப் போராட்டத்திற்கு எந்த வகையில் உந்து சக்தியாக விளங்கப் போகிறதென்பதை எதிர் காலம் தான் நிர்ணயிக்கவல்லது.

இப்போராளிகளுக்கு எமது புரட்சி வாழ்த்துக்கள்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஈழவர்!

இலங்கையிலிருந்து ஈழவர் வெளிநாடுகளை நோக்கிச் செல்வது பற்றியும் அதன் பக்க விளைவுகள் பற்றியும் ஆராய வேண்டியது இன்று மிகவும் அவசியமானது. இங்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் ஈழவரைத் தவிர்த்து மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், சுவீட்சர்லாந்து, இங்கிலாந்து போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் வாழ்ந்து வரும் ஈழவரின் மன நிலைகளையும் எண்ணங்களையும் கவனத்திற் கொள்ளப்படுகிறது.

ஈழப் போராட்ட நிலைகளுக்கான சாத்தியக் கூறுகள் பெருமளவு ஏற்படும் இவ்வேளையில் பெருமளவுஇளைஞர்கள் யுவதிகள் இப்படியான நாடுகளுக்கு ஏன் போகிறார்கள் என்ற கேள்வி எழுவது இயற்கையே. ஈழத்தை எடுத்துக் கொண்டால் அதிலுள்ள நடுத்தர வர்க்க குட்டி பூர்சுவா வகுப்பினர் காணி வாங்க வேண்டும், வீடு கட்ட வேண்டும் சீதனம் கொடுக்க வேண்டும் சொகுசான வாழ்வு வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளவர்களே. இவர்கள் இனிமேல் ஸ்ரீலங்காவில் தாம் விரும்பும் வாழ்வைத் தேடிக் கொள்ள முடியாது என்ற உள்மன அறுவிப்பினால் இப்படியான நாடுகளில் குடியேற முற்படுகின்றனர். எமது சமூகத்தின் ஒரு பகுதியினரின் சிந்தனைக்கெட்டிய நடைமுறை விளைவே இது. இதில் தங்கள் உடல் உழைப்பினை அறிவினை பணத்திற்கு விற்பவர்களும் குறுக்கு வழிகளில் பணத்தைத் தேடிக் கொள்பவருமாகவே அநேகர் காணப்படுகிறார்கள்

இவ்வாறு இந்நாடுகளில் வாழ்ந்து வரும் ஈழவரில் சுமார் 98 சதவீதத்தினர் பணத்தின் மூலம் சகலதையும் சாதித்து விடலாமென்ற பிற்போக்கு எண்ணங் கொண்டவர்கள். இவர்களிடம் பணத்தை சம்பாதிக்க வேண்டும் சேமிப்பிலிட வேண்டும் சொகுசாக வாழ வேண்டுமென்ற இந்த மனப்பாங்கு வேரூன்றியுள்ளது. அத்துடன் இப்பேர் வழிகள் தாங்கள் வசித்து வரும் நாட்டில் என்னென்ன விதமான செயல் முறைகளில் ஈடுபட்டால் நீண்ட காலமாக அதே நாட்டில் வாழவும், அங்கு ஏற்படுத்தப்படும் சேமிப்புத் தொகையை அதிகப்படுத்தவும் முடியுமென்ற எண்ணங் கொண்டவர்களாயிருக்கின்றனர். அத்துடன் அவர்களது வர்க்க நிலைப்பாட்டிற்கு ஏற்றபடி அரசியலில் செயல்படவும் முயற்சிக்கிறார்கள்.

ஏனைய இரண்டு சதவீத அளவிலான மக்கள் புத்தி ஜீவிகளாக காணப்படுகிறார்கள். இவர்கள் சமூக உந்துதலினால் உந்தப்பட்டு விடுதலைக்குத் தம் பங்களிப்பைச் செய்யத் துடிக்கும் இயல்பினராகக் காணப்படுகின்றனர். இந்தச் சாராரில் இளைஞர்கள் சரியான வழி நடத்தலை வேண்டி நிற்கிறார்கள்

முதலாளித்துவ சிந்தனை கொண்டவர்கள் ஏனைய விடுதலை விரும்பிகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ எதிர்த்து நிற்கும் வர்க்க இயல்பை தெளிவாக அங்கு பார்க்கலாம்

இந்தப் பின்னணியில் இந்நாடுகளில் வதியும் ஈழவர் அரசியலில் எவ்வாறு ஈடுபட்டு வருகிறார்களென்பது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்நாடுகளுக்கு இடம் பெயர்ந்து வந்தவர்களில் அநேகர் அரசியல் புகலிடம் கோரியவர்களாக இருக்கிறார்கள். எனவே இவர்கள் அரசியலில் விரும்பியோ விரும்பாமலோ ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். இவர்களில் பலர் தங்களுக்குச் சார்பான தனிப்பட்ட ஆசை அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் அரசியல் பித்தலாட்டங்கள் செய்கிறார்கள், வேஷம் போடுகிறார்கள். பேச்சு வன்மை கூடியவர்கள் தங்களை ஒரு சிந்தனாவாதிகளாக காட்டிக் கொள்ள எத்தனித்து சில அசட்டுத்தனமான கொள்கைக்களைக்கூறி அதைச் செய்தாலென்ன இதைச் செய்தாலென்ன என்று அலட்டிக் கொள்கிறார்கள்.

சிலர் அங்குள்ள முதலாளித்துவ தொழில் ஸ்தாபனங்களில் கூலிகளாக வேலை செய்து கொண்டு தாங்கள் ஒரு பெரு முதலாளியென்ற கற்பனையில் மிதந்து முதலாளித்துவ சார்பாக இயங்க முற்படுகிறார்கள். தொழிலாளர் மலர்ச்சிக்கான சோசலிச ஈழமென்ற கருத்தை இவர்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள். ஒரு சிலர் நேரடியாக இதை வெளிப்படுத்தினாலும் மனதுள் நினைத்துக்கொண்டு வெளிப்படுத்தாமல் வெளியே வேசம் போடுகிறார்கள். ஒரு சிலர் வேறு நாடு உதவி செய்து (குறிப்பாக இந்தியா உதவி செய்து) தாம் விரும்பும் ''தமிழீழத்தை'' பெற்றுதருமென்றும் அது தமது பணப் பெருக்கத்திற்கு ஏற்ற சொகுசான வாழ்வுக்கு இடம் தரும் என்றும் கனவு வாழ்க்கை வாழ்கிறார்கள். அநேகர் முதலில் விடுதலையைப்பெறுவோம். அதன்பின் என்ன மாதிரியான ஆட்சியை அமைக்கலாமென்று மக்கள் மூலல் யோசிப்போம் என்ற குறைப்பாட்டுச் சிந்தனையுடையவர்களாகவும் சோசலிசத்தை ஜீரணிக்க முடியாதவர்களாகவும் காணப்படுகிறார்கள் மக்களாட்சியென்று அதிகம் அலட்டிக கொள்ளும் இவர்கள் சோசலிசம் பற்றி முழுமையாக உணர முடியாதவர்கள். சில வெளிநாடுகளில் வாழ்பவர்கள் சங்கங்கள் கழகங்கள் போன்ற அமைப்பில் தங்கள பாதுகாப்பு வேண்டி ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் வெளியிடும் பத்திரிகைகளில் கருத்து முரண்பாடுகளையும் திடமில்லா கொள்கை நிலைப்பாட்டையும் கவனிக்க கூடியதாயிருக்கும் இந்த அமைப்புகளின் செயற்பாடுகளை ஆழமாக நோக்குமிடத்து புரட்சிகர எண்ணங்கொண்ட இயக்க அமைப்புகளுக்கு எதிரானதாயும் முதலாளித்துவ சிந்தனைப் பாடுகளுக்கு இடங்கொடுக்கும் தன்மை வாய்ந்ததாகவும் காணப்படுகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4-ம் பக்க தொடர்ச்சி

அப்போ நாகரீகம் முதிராத காலகட்டத்தி லேயே ஈழத்தின் இயற்கையோடிணைந்த ஒரு மனித நாகரிகம் இருந்ததென்பது வளர்ச்சி யடைந்து வந்ததென்பதும் நமக்கு புலனு கின்றதல்லவா.

அடுத்து ஈழத்தின் பேச்சு வழக்கில் இன் றும் சங்க கால இலக்கியங்களில் காணப் படும் சொற்கள், சொற் பதங்கள், கை யாளப்படுகின்றன. மகன், முகில், ஐது போன்ற சொற்கள், தமிழகத்தில் கூட வழக் கொழிந்துவிட்டன. ஆனல் இன்றும் ஈழத் தில் இவை போன்ற எத்தனையோ சொற்கள் சர்வ சாதாரணமாய் பேச்சு வழக்கில் உள் ளன. அத்துடன் ஈழத்தின் பேச்சு வழக்கும் உச்சரிப்பும் பெருமளவில் தமிழகத்தைவிட மாறுபட்டே காணப்படுகின்றது. இவற்றை விட கலை இலக்கிய வெளிப்பாடுகளில் கூட அவர்களிடம் ஒரு தனித்தன்மை வாய்ந்த பழமை காணப்படுகின்றது. மட்டக்களப்புப் பகுதியின் வசந்தன் கூத்தும் யாழ்ப்பாணப் பகுதியின் வடமோடி தென்மோடி இசைக் கூத்தும் தமிழகத்தின் பழமையான கலைமரவு களைவிட மாறுபட்ட தன்மையிலேயே காணப்படுகின்றன.

ஈழத்திலும் தமிழகத்திலும் மக்கள் பேசும் மொழி தமிழ் என்பது மட்டும்தான் ஒற்றுமை அதற்கு மேல் இரண்டு பகுதியின ரும் (ஈழம் தமிழகம்) வாழும் மக்களின் வர லாறுகள், பழமைகள், வழமைகள் வேறு வேறுபட்டவை.

இன்று கேரளாவில் வாழும் ஈழவர்கள் என்னும் சமுதாயத்தினர் ஈழத்தில் இருந்து தான் குடிபெயர்ந்தனர் என்பதினை பல வர லாற்று ஆசிரியர்கள் உறுதி செய்துள்ளனர் இன்றும் கூட அச் சமுதாயத்தினது பழக்க வழக்கமும், வீடமைப்பு முறையும் உணவு, உடை, ஆகிய வற்றிலும் ஈழத்தின் மக்களா கிய எமது தன்மைகளுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. கேரள ஈழவ சமுதாயத்தின் பூர்வீக வரலாறு கூறும். ''மலபார் யாப்பு'' என்னும் நூல் ஈழவர்கள் கேரளாவின் பூர்வீக குடிகள் அல்லவென்றும் ஈழத்தில் இருந்து குடிபெயர்ந்தோரே என் றும் பதிவு செய்துள்ளது. இப்போது இம் மக்கள் எங்கள் தாயகம் ஈழம் என்று உரிமை கொண்டாடுவதோ அல்லது ஈழத்திலிருப் போர் இவர்களை எமது சேயக மக்கள் என்று உரிமை கொண்டாடுவதோ அந்த அளவிற்கு சாத்தியமானது சரியானது ஆகவே தமிழகத் திலிருந்துதான் ஈழத்திற்கு குடிபெயர்ப்பு நடைபெற்றதென்றால் ஈழத்திலிருந்து கேர ளாவிற்கு குடிபெயர்ப்பு நடைபெற்ற போது அவர்கள் ஏன் தமிழகத்தை தாயகமாகக் கொள்ளாமல் தமிழகத்தை தாண்டி கேரளா விற்கு சென்றனர். அவர்கள் தமிழகத்தி னூடாகத்தான் கேரளா சென்றார்கள் என்ப தற்கு பல கல்வெட்டு சான்றுகள்கூட கண்டு பிடிக்கப்பட்டுள்ளது ஆகையால் இந்த வர லாற்று சான்றுகூட தமிழகம் எங்களின் தாய கம் என்றும் கருத்தை நிராகரிக்கின்றது.

இவ்வரலாற்றுச் செய்திகளையும் சான்று களையும் முற்றாக நிராகரித்து விட்டு விட்டு தமிழகம் தான் தாயகம் என்று வைத்துக் கொள்வோம். இதற்காக சில அண்மைக்கால வரலாற்றுச் சான்றுகளையும் தணிக்கிழத்தப் பார்ப்போம். இன்றைய அமெரிக்கமக்கள்கூட பெரிய பிரித்தானியா என்று அழைக்கப்படும் இங்கிலாந்து நாட்டிலிருந்து தான் குடியேறி னார்கள் அதவும் முன்னூறு அண்டுகளுக்கு முன்பு மிகவும் நாகரீகம் வளர்ச்சி அடைந்த காலகட்டத்தில் மிகத் துல்லியமாக வரலாறு பதிவு செய்யப்படும் அறிவு வளர்ச்சி பெற்ற நிலையில் குடியேற்றம் நடைபெற்றது. ஆனல் இன்று ஒரு அமெரிக்கனிடம் சென்று உங்கள் தாயகம் இங்கிலாந்து என்று கூறிப்பாருங்கள் அவன் உங்களை எள்ளி நகையாடுவான். தற் கால வரலாற்றின் முதல் சுதந்திரப் போராட்டம் என வர்ணிக்கப்படும் அமெரிக்க சுதந்திரப் போர் அவர்கள் குடியேறிய நூறு ஆண்டுகளுக்கு உள்ளேயே நடைபெற்றது. அதுவும் தங்கள் மூதாதேயர் வாழ்ந்த அவர் களின் தாயகமான பெரிய பிரித்தானியா வக்கு எதிராகவே சுதந்திர பிரகடனத்தை செய்தார்கள். பெரிய பிரித்தானியாவை ஓட ஓட விரட்டினார்கள் இன்றும் அமெரிக்க கடற் கரையில் சுதந்திரத் தீபம் ஏந்தி கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் அந்த சுதந்திரச் சிலை (Liberty Statue) அவர்களது போராட்டமே வரலாற்றாசிரியர்களால் வியந்து குறிப்பிடப் படும் முதலாவது பிரஞ்சு புரட்சிக்கு உந்து சக்தியால் காரணியங்களில் ஒன்றாக அமைந் தது, இங்கே தாயகம் எது சேயகம்எது என்ற பிரச்சனை சுதந்திர தாகத்திற்கு முன்னால் அடிப்பட்டுப் போய் விடுகின்றது.

ஏன் ஈழமும் தமிழகமும் சார்ந்த அண்மைய வரலாற்றையே நாம் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். 1962-ல் மேற் கொள்ளப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தி லிருந்து இன்று வரை ஏறத்தாழ் 3½ லட்சம் மக்கள் ஈழத்திலிருந்து தம் தாயகம் தமிழகம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றுதானே வந்தார்கள் இவர்கள் தமிழகத்திலிருந்து குடியகற்றப் பட்டதோ 150 ஆண்டு முன்புதான், ஆனால் இம்மக்களுக்கு தாயகம் அளித்த வாழ்வுதான் என்ன? இவர்களுக்கு கிடைத்த வரவேற்பும் மரியாதையும் என்ன என்பதினை அம்மக்களே கூறும் போது நம் கண்களுக்கல்லவா இரத்தம் வந்து விடுகின்றது இன்றும் அம்மக்கள் ''சிலோன் காரன்'' ''அகதி'' என்ற பட்டப்பெயருடன் தான் வாழ்கின்றனர். இங்குள்ள அரசியல் தலைமைகளின் தேர்தல் அறிக்கைகளில் கூட இந்த மண்ணின் மைந்தர்கள் இவர்களென அங்கீகாரம் வழங்கப்படவில்லை. இப்பொது எங்கே தாயகமும் சேயகமும்.

ஆதலால் தன் உழைப்பை ஈந்து தன் வாழ்வுக்கு வழி தேடி எந்த மண்ணுடன் இயற்கையுடன் ஒருவன் ஒன்றி விடுகின்றானோ அந்த மண்தான் அவனுக்கு தாயகம் அந்த மண்ணில்தான் அவனுக்கு இறைமை அந்த மண்தான் அவனுக்கு எதிர்காலம்.

எமது தாயகம் குறித்து நாம் எழுதிக் கொண்டிருக்கையில் இன்னொரு விடயம் குறித்து எழுதுவதும் அவசியமாகின்றது. ஈழவர்களின் இறைமைக்காய் போராடத் துடித்துக் கொண்டிருக்கும் சிலர் தமிழ் ஈழமே எங்கள் தாயகம் என்று தமிழ் ஈழத்தின் விடுதலைக்காய் போராடுகிறோம் என்றும் தங்களை பிரகடனம் செய்து கொண்டிருக்கிறார்கள் இவர்களில் இத்தமிழ் ஈழ தாயகம் குறித்தே நாம் விளக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

''ஈழம் ஒரு நாடென்று'' ''ஆண்ட பரம்பரை நாங்கள்'' என்று அதிமேதாவித்தனமாய் வரலாறு பேசும் இவர்கள் தமிழ் ஈழம் என்னும் பகுதியை ஆட்சி புரிந்தவர்களின் வரலாற்று முகவரிகளை தெரிவிப்பார்களா? ஏனென்றால் இவர்களின் வரலாற்று அடிப்படைகளின் மீதே நாம் சந்தேகம் கொள்ள வேண்டியவர்களாய் உள்ளோம். தமிழர்களாகிய நாங்கள் முடி கொடியுடன் ஆட்சி செய்து கொண்டிருந்தோம் அந்நியராகிய ஐரோப்பியர் வந்தபோது எமது முடி கொடியினை இழந்தோம். இன்று மீண்டும் அவற்றிற்காய் போராடுகிறோம். அப்படியானால் இவர்கள் இழந்தது தமிழ் ஈழத்தை தானா? இதற்கான வரலாறு தான் என்ன! இதிகாசங்களிலாவது தமிழ் ஈழம் குறித்தும் செய்திகள் உண்டா? நிச்சயம் இருக்க முடியாது.

ஏனெனில் அன்னியர் வருகைக்கு முன்பான தமிழர் அரசு என்பது ஒரே அரசாக இருந்தது இல்லை. நிலப் பிரபுத்துவ தன்மையின் வெளிப்பாடான துண்டு துண்டான ஆட்சியே காணப்பட்டது. யாழ்ப்பாண ராச்சியம், வன்னி ராச்சியம், கொட்டியாரப் பற்று, பழுங்காம வன்னிமை போன்ற பல சிற்றரசுகள் ஆட்சி புரிந்தன. அதே வேளையில் தென்னிந்திய படையெடுப்பு நடைபெற்ற காலங்களில் தென்னிந்திய ஆளுமையின் கீழும் ஆட்சி நடைபெற்றது ஆதலால் என்றும் ஒரே கொடி, ஒரே முடி என்னும் வாழ்வு தமிழர்க்கு இருந்தது இல்லை. இது நிலப் பிரபுத்துவ வளர்ச்சி முறையான எந்த சமுதாயத்திற்கும் பொருந்தும். முதலாளித்துவம் தோன்றத் தொடங்கிய பின்பு தான் ஒரே ஆட்சி என்பதும், தேசியம் என்பது முகிழ்ந்தது. அத்துடன் நிலப்பிரபுத்துவ காலத்தைய ஆண்ட பரம்பரை என்பது தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் குறிக்காது. ஏனெனில் மக்கள் திரளின் ஒரு சிறு பகுதியினரின் தலைமுறை ஆட்சி தான் நடைபெற்றது. மக்கள் வாய் மூடி மௌனிகளாக வாழ்ந்தார்கள், இது தான் விஞ்ஞான பூர்வமான வரலாறு. ஆதலால் அவர்கள் இழந்தது பல அரசுகளாய் பிரிந்திருந்த தங்கள் வாழ்வின் இறமையை பல அரசுகளில் ஆன ஈழம் என்ற தங்கள் இயற்கை அமைப்பை இன்று மீண்டும் தங்கள் வாழ்வின் மீதான இறமையையும் இயற்கை அமைப்பினையும் பெறுவதற்கு முயல்கின்றார்கள். இவ்வமைப்பு முன் ஒரு காலத்தில் பனை முனை முதல் தேவேந்திர முனை வரையும் சிலாபம் முதல் மட்டக்களப்பு வரையும் உள்ளடக்கியது, இடைக்காலத்தில் பருத்தித்துறை முதல் பொத்துவில் வரையும், மன்னர் முதல் திரிக்கோணமலையையும் உள்ளடக்கியது, இன்றோ பருத்தித்துறை முதல் பதுளை வரை, மன்னர் முதல் மட்டக்களப்பு வரை, பொத்துவிலை உள்ளடக்கியும் ஈழம் அமைக்க விரும்புகின்றார்கள். இதுதான் இன்றை நிதர்சனம், இது அல்லாதது ஆண்ட பரம்பரையினர்கான தமிம் ஈழமே.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "ஈழம்" ஆசியாவின் அடுத்த பாலஸ்தீனமா?

ஈழப்போராட்டத்துக்கான பிரதான படிக்கு நாம் மிகவும் நெருங்கிவிட்டோம். இந்த வளர்ச்சிக்காக 75-ம் ஆண்டு முதல் திட்டமிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நாம் இன்று அதற்கான அடித்தள சூழலை ஒழுங்கு படுத்துவதிலேயே கருத்தாயிருக்கிறோம். எமது பாதையில் செய்து வந்த ஆய்வுகளில் ''சைப்பிரஸில் துருக்கி'' என தலைப்பிட்டு தர்க்கீகத்தில் ஈழப்பிரச்சனைகளை இணைத்துப் பார்த்திருந்தோம். இன்று இப்பிரச்சனையையும், எதிர்கால ஆபத்தையும் பாலஸ்தீன—இஸ்ரேல் பிரச்சனைகளுடன் சில விடயங்களில் ஒப்பு நோக்குவது அவசியமானது.

மக்களின் நிலை :- இன்று மக்கள் அடுத்து என்ன ஆகுமோ என்று அஞ்சி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். நிம்மதியாய் கருமம் மாற்ற முடிவதில்லை. வீதியில் இறங்க பாதுகாப்பில்லை. தமது அடிமனது எண்ணங்களை சுதந்திரமாய் வெளியிட முடிவதில்லை: இவற்றுடன் கூடவே மக்களுடன் காலா காலமாகப் பின்னிப் பிணைந்து வந்த வறுமை வாழ்வின் பிடியும் இறுகிப் போயிருக்கிறது.

இந்த நிலையில் தமது சொந்தக்காலில் நிற்காது நின்ற அரசியல் தலைவர்களின் பாடோ பெரும்பாடாகி விட்டது. இத் தலைவர்களின் தலைகளுக்கே பேராபத்து வந்து விட்டது. இதனைச் சமாளிக்க இவர்கள் இந்தியப்படை யெடுப்பிற்காக அங்கலாய்க்கிறார்கள்.

தமிழ்ப் பேசும் மக்களின் மனக்குமுறங்களை வெளிக்காட்டவும், அதற்கு சாத்தியமான தீர்வை முன் வைத்துப் போராடவும் திராணியுள்ள இயக்கமோ, கட்சியோ பகிரங்கமாக இல்லை. இத்தகைய அநாதரவான நிலையை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஜயவர்த்தனவும் அவரது அடியாட்களும் தமது கைங்கரியங்களில் துணிந்து இறங்கியிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களை சின்னா பின்னப் படுத்தி அடக்குயொடுக்கி அழிக்கும் இலட்சியமே அரசுத்தலைவரின் அபிலாசை இவற்றை நிறைவேற்றுவதில் சிங்களக் குடியேற்றங்களின் பங்கு அதிகம். குடியேற்றத்தினால் திருமலையில் அல்லை, கந்தளாய், வானாறு, சேருவாவிலை, கொம்ப நாச்சி, போன்ற பகுதிகள் இரையாகி இருந்தன. அம்பாறை முழுமையாக விழுங்கப்பட்டுவிட்டது. வவுனியா முல்லைத்தீவு, மன்னார்ப்பகுதிகளுக்கும் இதே கதி. மலையகத்தின் அநேக இடங்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. இவை தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழில் நிலையங்களைச் சுற்றியும் இத்தகைய திட்டமிட்ட குடியேற்றங்களினதும் கள்ளக் குடியேற்றங்களினதும் ஆரம்பகாலம் 1931 என ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

அரசின் அவசர நடவடிக்கைகள்.

மிகவும் மோசமான ஆக்கிரமிப்பு வேலை இவ்வாறு படிப்படியாக வளர்ந்து இப்போது உச்சகட்டத்துக்கு வந்துவிட்டது. இந்தக் கட்டத்தை தெளிவுபடுத்த முன் இங்கு வெகு அண்மைக்காலங்களில் முடுக்கி விடப்பட்டுள்ள அரசின் சதி நடவடிக்கைகளை தொகுத்து நோக்குவோம்.

கலவரத்தை அடுத்து தமிழ் மக்களின் ஒரு சாராரான மலையக மக்களை இந்தியா செல்லுமாறு வற்புறுத்துவது ஒருபுறம். வடக்கிலும் கிழக்கிலும் சிங்களக்காடையர்களை திட்டமிட்டுக் குடியமர்த்தி வருவது, மறுபுறமாக இனவெறி ஆக்கிரப்பு விரைவு படுத்தப் படுகிறது.

வடக்கில் யாழ் கோட்டையின் முன் திடீரென சிலையாகத் தோன்றிய புத்தரும், பகுதித்துறையில் ஏற்படுத்த எத்தனிக்கும் குடியேற்றமும், நாவற் குழியில் கட்டுப்பட்டிருந்த வீடுகளில் சிங்களவரைக் குடியேற்ற எடுக்கும் முயற்சியும், லவுனியாவில் வாழ்ந்து வந்த மலையக மக்களை விரட்டியடித்துவிட்டு சிங்களவரைக் குடியமர்த்த எடுக்கும் பிரயத்தனமும் இவற்றின் வெளிப்பாடுகளே!

கிழக்கில் திருமலைப் பகுதியில் வாழ்ந்து வந்த 600 மலையகத் தமிழ்க் குடும்பங்களை லொறிகளில் ஏற்றி அப்புறப்படுத்தியமையும், மட்டக்களப்பு பகுதியிலுள்ள வடமுனையில் 1500 ஙிங்களக் காடையர்களை சுமர்த்தி 900 தமிழர்களை அகதிகளாக விரட்டிய சம்பவங்களும் கூடவே கவனத்திற்குரியன. வடமுனைக் குடியேற்றத்திற்கு அரசாங்க வாகனங்களை பயன்படுத்தப்பட்டமையும் தமிழ் அகதிகளுக்காக வெளிநாட்டார் வழங்கிய கூடாரங்களை காடையர்கள் இப்பகுதியில் பயன்படுத்தி வருவதும் அரச எந்த அளவிற்கு இணைந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்படுகிறதென்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

மிக அவசரமாக மேற் கொள்ளப்படும் இந்த வெளியேற்றமும் குடியேற்றமும் ஈழக் கோரிக்கையை வலுவிழக்கச்செய்ய வெடுக்கும் நடவடிக்கையேயன்றி வேறில்லை. இதை விரைவாக வலுவிழக்கச் செய்வதற்கு குடியேற்றங்களே சாலச்சிறந்ததென இன வெறியர்கள் கருதியிருக்கிறார்கள். பகுத்த சிங்கள வெறியன் ஜெயவர்த்தனாவுக்கு சற்றும் சளைக்காத பேரின வெறியன் சிறில் மத்தியூவின் அண்மைய பேச்சுக்களும், துண்டுப் பிரசுரங்களும் இதனையே அம்பலப்படுத்துகின்றன.

## புதிய யுக்தி

வடக்குக் கிழக்கில் அத்து மீறிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி குடியேறிய காடையர் கூட்டங்களுக்கு ஆயுதப்படையினரை அரணாக வைத்துக்கொண்டு அடிக்கடி கலவரங்களை ஏற்படுத்தி தமிழினத்தைப் படுகொலை செய்வதன் மூலம் ஈழக்கோரிக்கையை ஒரேயடியாக திருகிக் கொல்ல எத்தனிக்கிறார்கள். இந்த எத்தனிப்பு, இது கால வரையில் சீருடை அணிந்து ஆயுதந்தரித்த காடையர் குழுக்கள் செய்த படுகொலைகளையும், கற்பழிப்புகளையும், தீவைப்புகளையும், கொள்ளையடிப்புக்களையும், இனிமேல் குடியேற்றப்பட்ட காடையர்களே முன்னின்று செய்யப் போவதை உணர்த்தி நிற்கிறது. இது வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடிக்கடி ஆங்காங்கே இனக்கலவரங்கள் உருவாக ஏதுவாயிருக்கப் போகிறது.

நாடளாவிய நிலையில் நடைபெறும் கலவரங்களுக்கு வெளி நாடுகளில் இருந்து வரும் எதிர்ப்புகளிலும், ஆங்காங்கே நடைபெறும் சிதறலான கலவரங்களுக்கு வரும் எதிர்ப்புச் சக்தி குறைவானதென்பது அரசின் எண்ணம்.

இவ்வாறு அரசுபடைகளை நேரடியாக ஏவிவிடாது குடியேறிய காடையர்களூடாக ஆங்காங்கே கலவரங்களை மூளச் செய்து காரியத்தைச் சாதிப்பது ஜெயவர்த்தனாவுக்கு அபார வெற்றி அளிக்கவல்லது, இச்செயல் வடிவத்திற்கான பரீட்சார்த்தம் ஏற்கனவே திருகோணமலையில் பார்த்தாகி விட்டது ஜூலை காலத்திற்கு முன் 6ம்தேதி திருமலையில் ஆரம்பித்த கலவரத்தில் நூறு பேர் கொல்லப்பட்டனர். இருநூறு வீடுகள் தீக்கிரையாகின நானூறுக்கு மேற்பட்ட கொடுமைகள் நிகழ்ந்தன சுமார் பதினையாயிரம் பேர் அகதிகளாயினர் இத்தகைய பாரிய கலவர நாசங்களை திருமலையில் ஏற்கனவே குடியமர்த்தப்பட்ட சிங்களக் காடையர்களே ஆயுதப்படையினரின் உதவியுடன் நடத்தத் தூண்டப்பட்டனர். ஆயினும் இப் பேரழிவுகள் நாடு பூராவும் ஜூலை மாத இறுதியில் நடந்தேறிய கலவரங்கள் போல் சர்வதேச அரங்கில் முனைப்புப் பெறவில்லை.

இந்த அனுவவத்தைப் பயன்படுத்தியே ஜெயவர்த்தனாவும், கையாட்களும் இன்று திருகோணமலைக் காலவரம் போல் பலதை ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் அமுலாக்க எத்தனிக்கிறார்கள். இவற்றிற்கான முதற்கட்ட நடவடிக்கைகளே இன்று மிக வேகமாக நடைபெறும் கடையர் குடியேற்றத் திட்டம் செயலுருப் பெற்றிருப்பதாகும்.

## பாலஸ்தீனமும் ஈழமும்

சிங்களப் பௌத்த வெறியர்களின் செயற்பாடுகளுக்கும் யுத வெறியர்களின் வெறியாட்டங்களுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. எப்படி இஸ்ரேலியர் தமது யுத இன மத ஆக்கிரமிப்பை பாலஸ்தீனத்தில் திட்டமிட்டு இரத்தக்களரிகள் மத்தியில் நிறுவ முயன்றார்களோ, அதேபோல் சிங்கள பௌத்த வெறியரும் ஈழத்தில் நிறுவ முற்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆக்கிரமிப்பிற்காக யூத வெறியருக்கு பேருதவி செய்யும் அமெரிக்காவும் பிரித்தானியாவுமே சிங்கள வெறியருக்கும் உதவி புரிகிறது. எவ்வாறு பாலஸ்தீனரின் மண்ணில் நகராக்கம் செய்தும் பெரும் தொழிற்சாலைகளை நிறுவியும் விவசாய அமைப்புகளை உருவாக்கியும் அவற்றைச் சுய யுதர்களைக் குடியேற்றினார்களோ அதேபோலவே ஈழப் பிரதேசங்களிலும் சிங்களக் குடியேற்றங்கள் நிலவுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் பிரித்தானியாவினதும், அமெரிக்காவினதும் அந்தரங்க ஆலோசனையுடன் மூன்றரைக் கோடி யூதர்கள் பலவந்தமாக பாலஸ்தீனத்தில் குடியமர்த்தப்பட்டனர். 1918ல் பாலஸ்தீனத்தில் குடியமர்த்தப்பட்ட யூதர் தொகை 56.000 இது 1948ல் ஏழுலட்சமாக அதிகரித்து இருந்தது. 1980ல் இந்தத் தொகை 2, 211, 252 ஆக பெருகியுள்ளது.

இத்தகைய குடியேற்றங்களின் மூலம் பாலஸ்தீன மக்களின் மீது ஏவி விடப்பட்ட கொலை, கற்பழிப்பு தீ வைப்பு கொள்ளையடிப்பு செயல்களினால் 1948-ல் ஒன்பது லட்சத்து அறுபதினாயிரம் பேர் அகதிகளாகித் தத்தளித்தார்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்து மாக்கடலில் புயல் சின்னங்கள்

இந்து மாகடல் பகுதியில் ஈழத்தின் விடுதலைப் போராட்டம்'ஒரு புதிய புயலைக் கிளப்பும். ஈழம் இப்பிராந்தியத்தின் புதிய சமுதாயத்தின் திறவுகோலாக அமையும்' என்ற எமது இயக்கத்தின் ஆரம்பகாலக் கருத்துக்கள் தற்போது ஊர்ஜிதமாகி விடுகிறது. J. R இன் பாசிசப் போக்கு, ஜனநாயகத்தைக் குழிதோண்டி புதைத்து, சர்வாதிகாரத்தை அமைக்கும் என்றும் இலங்கை அரசு அமெரிக்காவின் கைப்பொம்மையாக மாறும் என்றும், இந்துப் பெருங்கடல் பகுதியின் எல்சல்வடோராக இலங்கை உருவாகும் என்றும் கூறப்பட்ட அனுமானங்கள் நிரூபணமாகி வருகிறது. 'தர்க்கீகம்' தனது ஆரம்ப இதழ்களிருந்தே 'அமெரிக்கா இலங்கையில் தளம் தேடுகிறது' என எச்சரிக்கை விடுத்தது பலருக்கும் நினைவிருக்கலாம். இந்தியாவிற்கு ஆபத்து யாரால்? என பொதுமை 11 வது இதழ் எழுப்பியிருந்த கேள்வியும், அண்மையில் இந்து சமுத்திரப் பிராந்தியம் தொதுர்பாக விஞ்ஞான அறிஞர் சபை ஏற்பாடு செய்த கருத்தரங்கில் திருமதி ராதா கங்கூலியின் உரையும் எமது கருத்தினை வலியுறுத்துகிறது. அண்மையில் அமெரிக்கா பாதுகாப்பு மந்திரி கஸ்பர் வைன்பேகரின் (Caspar weinberger) இரகசிய இலங்கை விஜயமும் இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதவராக திரு. எச். டபிள்யு ஜயவர்த்தனவின் ஒன்பது நாடுகளுக்கான சுற்றுப்பயணமும் எமது கருத்திற்கு மேலும் வலிமை அளிக்கிறது.

இந்து பெருங்கடல் பகுதியை தனது செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதற்கென டியாக்கோகார்சியாவில் தளத்தை நிறுவியுள்ள அமெரிக்கா இலங்கையின் திரிகோணமகாக் துறைமுகத்தை தமது ஆளுமையின் கீழ் கொண்டுவர பகீரதப் பிரயத்தனக்கப்படு

---

யூதரின் ஆரம்ப வெறியாட்ட காலங்களில் பாலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுத்த அரசியல் கட்சி எவ்வாறு உரமின்றி வலிமையின்றி வெறும் வாய் வீச்சு மட்டும் கொண்டிருந்ததோ, அதே போலவே இன்று த. வி. கூ. விளங்குகின்றது. அவர்கள் தமது பிரச்சினைகளை தாமே தீர்க்க எத்தனிக்காது அண்டை நாடான அராபியாவை படை எடுக்கும்படி கேட்டனர். இவர்கள் இந்தியாவை படை எடுக்கச் சொல்கிறார்கள். இத்தகைய அரசியல் கட்சியுடன் கூடவே பாலஸ்தினத்தின் பலவன்முறைக்குழுக்களும் இயங்கியிருந்தன. அவர்களும் திட்டமில்லாத தன்னிச்சையான தாக்குதல்களுடன் மட்டும் நின்றிருந்தனர். இவர்களால் இஸ்ரேலைப் பணியவைக்க முடியவில்லை.

அன்று பாலஸ்தீனமக்கள் அடைந்திருந்த அதே கட்டத்திலேயே இன்று தமிழ் மக்களும் இருப்பது வெளிப்படையாகிறது. இந்த நேரத்தில் அமெரிக்கப் பின்னணியில் ஒரு பாலஸ்தீனம் சீரழிவதைப் போல் அதே அமெரிக்கப்பின்னணியில் ஈழத்தையும் சீரழிய விடலாமா? பாலஸ்தீனர் அயல் நாடுகளுக்கு அகதிகளாக விரட்டப்படுவது போல் தமிழ் மக்களையும் அயல் நாட்டிற்கு விரட்டியடிப்பதை விட்டுவைக்க முடியுமா?

எதையும் துறந்து போராடத் தயாராகி விட்ட மக்களுக்கு இன்று திட்டமிட்டு முன்னேறக் கூடிய இயக்கமே அவசியமாகிறது. இது இந்தக்கால கட்டத்தில் வெளிவர வேண்டிய நிர்பந்தம் வந்தாகிவிட்டது. வெறும் தாக்கும் செயலன்றி ஜெயவர்த்தனவையும், அரச விசுவாசிகளையும் கிடுகிடுக்க வைக்கும் ஆயுதம் தரித்த மக்கள் போராட்டத்திற்கு அணிதிரட்டல் செய்யும் கால கட்டமே இது. ●



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறது. ஏறத்தாழ 15 போர்க்கப்பல்கள் ஒரே சமயத்தில் ஒன்றிற்கொன்று மறைவாக நிற்கக்கூடிய இயற்கைத் துறைமுகமான திரிகோணமலையில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் ஏறத்தாழ 2000 மைல்கள் (டியோகா கார்சியாவிலிருந்து—திரிகோணமலை) பயணத் தூரத்தை குறைப்பதுடன், அண்டை நாடுகளையும் மற்றும்—தென்கிழக்காசிய நாடுகளை கண்காணிக்கும் வசதிகளைப் பெருக்கலாம் என்றும், இந்துப் பெருங்கடல் பகுதியில் முழுமையாக தனது செல்வாக்கை நிலை நிறுத்தலாம் என்றும் அமெரிக்கா கணக்கிடுகிறது. இவ்வாறு இந்துப் பெருங்கடல் பகுதியின்மீது அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த முயல்வதன் மர்மம்தான் என்ன?

பூமிப் பரப்பின் மேல் மூன்றாவது பெரிய பரப்பாக ஏறத்தாழ ஆசியாவையும் ஆபிரிக்காவையும் இணைக்கின்ற பரப்புக்கு சமமானதாக விளங்கிக்கொண்டிருக்கிறது இந்துமா கடல். பசிபிக் கடலையும் அத்திலாந்திக் கடலையும் இணைக்கும் நீர்ப்பரப்பாகவும். ஐரோப்பாவை, கிழக்கு ஆபிரிக்கா தெற்கு, தென் கிழக்கு ஆசியா, தூரகிழக்கு நாடுகள் அவுஸ்திரேலியா என்பவற்றுடன் இணைப்பதாகவும் இக்கடல் விளங்குகிறது. கரையோரத்தில் ஏறத்தாழ 36 க்கும் மேலான நாடுகளையும் உலகின் மொத்த ஜனத் தொகையில் 1/3 பங்குக்கும் மேலான மக்கட் தொகையும் இந்த பிராந்தியம் கொண்டிருக்கிறது.

இதற்கும் மேலாக உயர் ரகக் கனிப் பொருட்கள் இக் கரையோர நாடுகளிலும் இந்து கடலின் கடற்படுக்கைகளிலும் காணப்படுகிறது. 80.7% தங்கம், 56.6% தகரம், 28.5% மங்கனீஸ், 15.5% நாகம், 77. 3% இயற்கை ரப்பர் என்பன போன்றவற்றின் பெரும் இருப்பிடமாகவும் இப் பகுதி இருக்கின்றது.

இந்துக் கடலின் கடற்கரைப்பகுதி எண்ணெய் இயற்கை வாயு என்பவற்றின் பெரும் இருப்பிடமாகவும் இருப்பதோடு கடலின் அடிதளத்தில் இரும்பு மங்கனீசுப் படிவுகளையும் வேறும் பல தாதுப்பொருட்களையும் கொண்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இவற்றை விட எல்லாப் பருவகாலங்களிலும் பயணம் செய்யக்கூடிய கடலாக இருக்கும் இந்துப்பெருங்கடல் கப்பல் போக்குவரத்துறையில் ஒரு பெரும் பங்கை ஆற்றி வருகிறது, உலகின் மொத்த சரக்கு போக்குவரத்தின் ¼ பங்கும், எண்ணெய் பரிவர்த்தனையில் 2/3 பங்கும், இக் கடலின் துறைமுகங்களிலேயே ஏற்றி, இறக்கப்படுகின்றன. சாதாரணமாக வருடமொன்றிற்கு செங்கடலூடாக 20000 கப்பல்கள் சுயஸ் கால்வாயினை கடக்கின்றன. அதனால் சுயஸ் கால்வாய் மூடப்பட்டதும் கேப்டவுன் துறைமுகத்திற்கு நாளொன்றிக்கு 70 கப்பல்கள் வீதம் வருடத்திற்கு 25500 கப்பல்கள் வந்தன என்பது இந்துப் பெருங்கடல் ஊடாக நடைபெறும் கப்பல் போக்குவரத்தைக் காட்டும் அளவு கோலாகும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இந்துப் பெருங்கடலின் ஆதிக்க உரிமை கடந்த நூற்றாண்டு வரையில் காலனித்துவ வாதிகளின் கையில் கிடந்தது. பிரிட்டன், பிரான்சு, போர்த்துக்கல் ஒல்லாந்து போன்ற காலனித்துவ வாதிகள் இப்பெரும் பகுதிகளின் மீது உரிமை கொண்டாடினர். 19ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இப்பகுதியில் தனக்கென ஒரு இடத்தை பெற்றுக்கொள்ள அமெரிக்க முயன்று வருகின்றது. ஆனால் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சியும் அதனையடுத்து காலனி நாடுகளில் வெடித்தெழுந்த தேசிய எழுச்சியும், ஏகாதிபத்தியங்கள் முட்டி மோதிக்கொண்ட முதலாம், இரண்டாம் போரில் ஏற்பட்ட இராணுவ பொருளாதார சேதங்களும், காலனித்துவ வாதிகள் மீது பெரும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியது. காலனி நாடுகள் ''சுதந்திர அரசுகளாக'' பரிணமித்தன. ஆனால் முழுமையாக தங்கள் கால்களை எடுக்க விரும்பாத, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆங்காங்கே தங்கள் தளப் பிரதேசங்களை அமைத்து கொண்டன. ஆனால் காலப்போக்கில் அந்தந்த நாட்டு மக்களின் நிர்ப்பந்தத்தினால் தளங்களை வாபஸ் பெற வேண்டியதாகிவிட்டது.

இந்த நிலையின் அதாவது இரண்டாவது உலகப்போரின் பின் காலனித்துவ வாதிகள் விட்டுச் சென்ற பிரதேசங்களில் ஒரு ''அரசி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

யல் வெற்றிடம்'' ஏற்பட்டிருப்பதாக கருதிய அமெரிக்கா இப்பகுதியில் தனது செல்வாக்கை எடுத்தது எடுத்தும் வருகின்றது. 50 களில் சியாட்டோ (Iseato) சென்டோ (Sento) போன்ற அரசியல், இராணுவ முகாம்களை நிறுவ முயற்சித்த அமெரிக்கா இவற்றினூடாக இப்பிராத்சியத்தின் தேசிய எழுச்சியை அடக்கி ஏகாதிபத்திய பிடிக்குள் வைத்திருக்கலாம் என எண்ணியது. ஆனால் ஐரோப்பிய கூட்டாளிகளான நேட்டோவை (Nato) போல அல்லது அதற்கு சமமான தாக இந்த ஆசியக் கூட்டாளிகள் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கவில்லை. இதனால் Seato Sento போன்ற அமைப்புக்கள் பலமானதாக வளரவும் முடியவில்லை.

இந்த வகையில்தான் தமது இராணுவத்தை இப்பகுதியில் நிலை கொள்ள (Active military Presence) வைத்தால்தான் இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்த முடியும் எனக் கணக்கிட்டு, பிரிட்டன் வசமிருந்த மொரீசியசுக்கு சொந்தமான டிகோகாசிகா தீவை பிரிட்டனிமிருந்து பெற்றுக் கொண்ட அமெரிக்கா அங்கே தனது தளத்தை நிர்மாணித்துள்ளது. உலகின் பிற்போக்கு சக்திகளுக்குப் பின்பலமாக விளங்கும் அமெரிக்கா ஆகிய,ஆபிரிக்கப் பகுதிகளில் தமது நண்பர்களுக்கு உதவ இதனை வாய்ப்பாக பயன்படுத்தவும் தவறமாட்டார். தென் ஆபிரிக்கா, பிலிம்பைன்ஸ், இந்தோனிசியா போன்ற நாடுகளின் தலைமைக்கு முட்டுக் கொடுக்க இவர்களது பிரசன்னம் அடிக்கடி பயன்படுத்துகிறது.

இலங்கையின் மீது அமெரிக்கா கொண்டுள்ள கவனமும் இத்தன்மையதே பண்டார நாயக்காவின் அரசாங்கத்தால் திருமலையிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டியதாயிற்று அதனால் ஏற்பட்ட ''அரசியல் வெற்றிடத்தை'' தான் நிரப்புவதற்கு நீண்டகால கடன், நன்கொடை போன்றவற்றின் மூலம் இலங்கையை பிடிக்குள் நிரந்தரமாக அமெரிக்கா ஐக்கிய தேசிய கட்சியின் மூலம் முயன்று வந்தது. பொருளாதார உதவி தனது நீண்டகால கடன், நன்கொடை போன்றவற்றின் மூலம் இலங்கையைத்தனது நவ காலனியாக்கி விட்ட அமெரிக்கா இப்போது தன் பிடிக்குள் நிரந்தரமாக் வைத்திருக்க முயல்கிறது. கைப்பொம்மையானயே ஆரை பயன் படுத்தி தனது கனவுகளை நிறைவு செய்யலாம். என்ற நப்பாசையுடன் செயல்படுகிறது. இவ்வாறான யே ஆரின் நிரந்தர ஆட்சி ஏற்படுத்துவதற்கு இரண்டு விடயங்களை தடடையாக நின்றன. 1. மாறி மாறி ஆட்சியை பிடித்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செல்வாக்கு 2. தமிழ் பேசும் மக்களின் தனி நாட்டிற்கான பேசராட்டம்.

முதலாவது தடையை மிக சுலபமான ஜனாதிபதி கமிஷன் தீர்த்து வைத்துவிட்டது. அதிகார துஷ்பிரயோகம் 'லஞ்சம்' சட்ட விரோத ஆட்சி நீடிப்பு ஏனைய முக்கியத்தர்களினதும் குடியுரிமைகளை பறித்தது மூலம் சுதந்திர கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டு. பிளவுகள் ஏற்பட்டது. சுதந்திர கட்சி பலமிழந்த நிலையில் தன்னை நிலை நிறுக்கி கொள்ள போராடி வருகிறது.

இரண்டாவது தடையாக இருந்தது தமிழ்பேசும் மக்களின் தனிநாட்டு கோரிக்கை 1977-ன் பிற்பகுதியிலேயே மசாசூட்ஸ் (Massauchetts) மாநிலம் ஈழத்தை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியது. அதைத் தொடர்ந்து சோமவில்லி (Sommerville) மாநகரம் திருகோணமலையை தனது சகோதர நகரமாக அறிவித்தது. இலங்கை தமிழர் மீது அமெரிக்கா கொண்டிருக்கும் 'பரிவு' குறித்தும், ஈழ விடுதலைப் போாரட்டத்திற்கு அமெரிக்கா ஆதரவு நல்கும் எனவும் தமிழ் மக்களுக்கு கூறப்பட்டது. தமிழ் பேசும் மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த முதலாளி வர்க்க பிரதிநிதிகளுக்கு அமெரிக்கா உற்ற நண்பனாகியது. அதன் விளைவாக மாவட்ட அபிவிருந்தி சபை கிடைத்தது.

ஆனால் இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளாலும் இதுபோன்ற சலுகைகளாலும் தமிழ் பேசும் மக்கள் விடுதலை வேட்கையினை தணித்துவிட முடியாது என்பதையே அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

தமிழ் பேசும் மக்களது விடுதலைக்கான கோரிக்கை வெறும் அதிகாரக் கை மாற்றத்திற்கான கூக்குரலுமல்ல அல்லது தரமாற்றத்தை ஏற்படுத்தாத தலைமையினைக் காப்

www.tamilarangam.net

பதற்கான கூப்பாடுமல்ல. என்பது இப்போது பலராலும் உணரப்படுகிறது. அடிப்படை மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு புதிய சமுதாயம் ஒன்றைப் படைப்பதற்கான அடிக்கல் தான் ஈழத்தின் விடுதலை என்பது பரவலாகப் புரியப்படுகிறது.

பேய் பிசாசுகளுடன் சேர்ந்தாவது எமது விடுதலையை பெறுவதே முதல் காரியம் என பிதற்றி திரிந்த தலைவர்கள் உயிரைக் கையில் ஏந்திய வண்ணம் செய்வதறியாது நாட்டை விட்டு தலைமறைவாகி வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா எமது விடுதலைப் போராட்டத்திற்கே உதவும் எனக் கூறி காலம் கழித்த தலைவர்கள் தங்களை கூடப் பாதுகாக்கும் வழி தெரியாது சிக்கித் திகை மாறி தவிக்கின்றனர்.

இந்நிலையில்தான் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் (Caspar weinberaer) கஸ்பர் வைன்பேகர் கலவரங்கள் ஓய்ந்து ஒரு மாதம் கூட பூர்த்தியாகாத நிலையில் இலங்கைக்கு மிக இரகசியமாக விஜயம் செய்து ஜே. ஆர். அரசுக்கு தமது ஆதரவை தொடர்ந்து நல்க சித்தமாக இருப்பதை உறுதி செய்துள்ளார். இலங்கையரசு அமெரிக்காவின் கைக்கூலியாகிவிட்டது. ஜனநாயக குழிதோண்டிப் புதைக்கப்பட்டு, பாசிச சர்வாதிகளும் மெல்ல மெல்ல நிறுவப்பட்டு வருகிறது. தென்கிழக்கு ஆசியாவில் ஒரு எல்சல்வடோராக இலங்கை மாற்றப்பட்டு வருகிறது.

# சர்வதேச மன்னிப்புச்சபை கூறுகின்றது

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்படி திரிகோணமலையைச் சேர்ந்த இளம் விவசாயி கே. நவரத்தின ராசா அவர்கள் மார்ச் 27 அன்று கைது செய்யப்பட்டார். ஒரு குற்றமும் சாட்டப்படாத இவர் பாதுகாப்பு படையினரால் சில நபர்களைப் பற்றிய விபரங்களைக் கேட்டறிவதற்காக கைது செய்யப்பட்டவராவார். ஏப்ரல் 10 அன்று குருநகர் இராணுவ முகாமில் இறந்த இவர் ஆஸ்துமா நோயால் இறந்தார் என அறிவிக்கப்பட்டது. ஆனல் இவருடைய மருத்துவ மரண அறிக்கையில் இவரது உடலில் புறக்காயங்கள் 25ம் உட்காயங்கள் 10ம் இருந்ததாக தெரியவந்தது. எனவே இவரது மரணம் கொலையே என்பது உறுதிப்படுகிறது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு; அடிப்படை மனித உரிமைகளைக் குறித்த புதிய சரத்துகளை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பை அமுல் படுத்தியது. இச்சட்டம் இதற்கு முன் சாதாரண சட்டங்களால் தடுக்கப் பட்டிருந்த சித்திரவதை செய்தலை முதல் முறையாக அரசியலமைப்பு ரீதியாக தடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. 27 ஆகஸ்டு 79ல் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தன அவர்கள் இச்சட்டத்தை வெகுவாக ஆதரித்து பிரஸ்தாபித்தார். இந்த அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் போது உச்ச நீதி மன்றத்தின்மூலம் தீர்வு காண இச்சட்டம் வழி வகுக்கிறது என்றார். ஆனல் அதே நேரத்தில் இந்த அடிப்படை உரிமைகள் மீதான சில கட்டுப்பாடுகள் ''நாட்டு பாதுகாப்பு'' கருதி விதிக்கப்படுகின்றன.

—ஐயத்திற்குரியோர் என்ற வகையில் கைது செய்யப்பட்ட எல்லா நிகழ்வுகளிலும் இராணுவ அதிகாரிகள் அல்லது போலீஸ் அதிகாரிகள் எவரும் தங்களை யாரென்று அதிகார பூர்வமாக வெளிப்படுத்திக்கொண்டதில்லை. கைதிற்கான சட்டக்கட்டளை (Arrest Warrent) எதையும் காட்டவோ, அல்லது கைதிற்கான காரணங்களைக் கூறவோ இல்லை. ஒவ்வொரு கைது நிகழ்ச்சியின் போதும், கைதாக்கட்டடுவோர் எங்கு கொண்டுசெல்லப் படுகிறார்கள் அல்லது எதற்காக என்ற எந்த விபரத்தையும் கைதாவோரின் உறவினர்களுக்கு அதிகாரிகள் கூறமல் கடுமையாக மறுக்கிறார்கள்.

—கைதானோரைப் பற்றிய எந்த விபரங்களையும் அவர்தம் வழக்குரைஞர்களுக்கோ உறவினர்களுக்கோ கைதான பல மாதங்களுக்குப் பின்னும் தெரிவிக்கப்படுவதில்லை.

—கைதானவர்கள் கீழ்க்கண்ட வகைகளில் எல்லாம் சித்திரவதைக்கு உள்ளானார்கள் எனத் தெரிகிறது.

1. கால் பாதங்களிலும் உடலின் அனைத்து உறுப்புகளிலும் தொடர்ந்து அடித்தல்.

2. தலை கீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடித்தல்.

3. கை, கால் நகக் கண்களில் ஊசிகளை ஏற்றித் துன்புறுத்துதல்.

4. கண், மூக்கு போன்ற உறுப்புகளில் மிளகாய்ப் பொடியை நிரப்புதல் நீண்ட நேரம் உணவும் நீரும் கொடுக்காமலிருந்து இறுதியில் உப்பும், மிளகாய்காரமும் கலந்த நீரைக் குடிக்குமாறு வற்புறுத்துதல்.

5. இன உறுப்புகளை தீயால் சுடுதல். அடித்து நொறுக்குதல். இவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டவர்களிடம் கட்டாயப் படுத்தி அவர்களிடம் படித்துக் காண்பிக்கப் படாத அறிக்கையில் கையொப்பம் வாங்கி விடுதல். இவையெல்லாம் இராணுவமுகாம்களில் மட்டுமல்லாமல் நான்காம் மாடி போன்ற கொழும்பு காவல் நிலையங்களிலும் நடைபெற்றன என்று ஆய்வின்மூலம் தெரிய வந்தது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நமது கீதம்

இன்னுயிர் ஈந்தும் ஈழம் அமைத்திட
ஏற்றவர் நாமுண்டு.
இன்னல் பலகோடி எதிர்த்தே வரினும்
ஏற்றிடத் தீரருண்டு.
பொன்னும் பதவியும் புழுதிக்கு நேரடா!
அட!
உன்னுள் இருக்கும்! ஓங்கார
மாசக்தி ஓங்கி வளரட்டும்
வீடுதலை தாங்கி அருளட்டும்

## நமது முழக்கம்

ஈழவர் தம்மிடர் ஈண்டு.
தொலைந்திட ஈரோஸ் இலங்கட்டும்—அந்த
வேழப் பெரும்படை வீறுகொண்டே
எழ வீணர்கள் ஓடட்டும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈரோசின் புரட்சி வணக்கம்

சிறையில் கொல்லப் பட்டவர்களுக்கும், கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கும், ஈரோஸ் தனது புரட்சி வணக்கத்தை தெரிவிக்கின்றது.

● ● ●

ஈரோஸ் இயக்கத்தின் திருக்கோணமலை மாவட்டக் குழு உறுப்பினரும். முழு நேரத் தோழருமான வெலிகடை சிறையில் கொல்லப் பட்ட கிருட்டினபிள்ளை நாகராசா (இராசகிளி)விற்கும் தோழர் சிவானந்த ராசாவிற்கும் மற்றும் இராணுவ முகாமில் சிங்கள இராணுவத்தால் அடித்து கொல்லப்பட்ட தோழர் நவரத்தினராசா ஆகியோருக்காக ஈரோஸ் தலை தாழ்த்துகின்றது.

● ● ●

எனது தோழர்கள் மறைந்தவர்களல்ல; மறைக்கப்பட்டவர்களுமல்ல; அவர்கள் முன்னெப் போதையும்விட இப்போது தான் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். அந்தச் சடலங்களிலிருந்து அவர்களின் கருத்துக்கள் வெற்றிப் பெருக்குடன் வெளிப்படுவதைக் கண்டு இந்தக் கொலைகாரர்கள் ஆச்சரியப்படுவார்கள். தீர்க்கதரிசியின் வார்த்தைகளில் கூறுவதானல், ''இறந்தவர்களின் சமாதியருகே கண்ணீர் சிந்துவதற்கும் ஓர் எல்லையுண்டு. தாய் நாட்டின்மீதும், அதன் புகழின் மீதும் எல்லையற்ற அன்பு செலுத்துவதுதான் அந்த எல்லை; இந்த அன்பு என்றும் தோல்வியடைவதில்லை; நம்பிக்கை இழப்பதில்லை; சுருங்கி விடுவதில்லை; தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்.

தாய் நாட்டின் மடியில் ஒருவன் உயிர் விடும்போது துன்பம் முடிகிறது; சிறைச் சங்கிலிகள் தெறிக்கின்றன. இறுதியில் அந்த மரணத்துடன் வாழ்க்கையும் துவங்குகிறது''.

— ஃபிடல் காஸ்ரோ—

ஈழப்புரட்சி அமைப்பு
(ஈரோஸ்)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்